# flex அருள்

ஜுலை 2013 கடவுளை வணங்குவோம் அருளினை பெறுவோம் விலை ரூ.50

www.flexguidemag.com

ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்

இதழ் 32




முகூர்த்தப் பட்டுப்புடைவைகளுக்கு ராசியான ஒரே இடம்..





JEYECHANDRANS
The Art of Fashion

No. 433, Galle Road, Wellawatte, Colombo 06.
Tel: 011 4528438/5, Fax: 011 2362822

New Branch : 194, Main Street, Colombo 11.
Tel: 011 2448870, Fax: 011 2448860

Web: www.jeyechandrans.com | Skype: jeyechandrans 888

Digitized by Noolaham Foundation.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்....

ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்


06-08 சைவம் ஓர் வாழ்க்கை நெறி



42-43 கிருஷ்ண அவதாரத்தில்




35-37 எறும்பின் தவம்



12-14 சாஸ்திரங்களும், சம்பிரதாயங்களும்



15-23 அற்புத ஆலயங்கள்




| | |
|---|---|
| 05 | எமது நோக்கம் |
| 9 | இந்து தர்ம சாஸ்திரம் |
| 10-11 | ஆடி மாதமும், அம்பிகை வழிப்பாடும் |
| 24 | நவக்கிரகங்கள் |
| 29-30 | எண்கணித ஜோதிடம் |
| 38-39 | தென்முகக் கடவுள் |
| 40 | பிரார்த்தனை எப்படிச் செய்வது? / மனம் வெளுக்க மார்க்கமுண்டு |
| 44 | திருமுருக தத்துவம் |
| 45 | ஆஞ்சநேயப் பெருமானின் சிறப்புக்கள் |
| 46-48 | பஞ்சாங்கம் / விரதங்கள் |
| 53-56 | ராசி பலன்கள் |
| 57-60 | பக்திக் கதைகள் |

25-26 சகல செல்வங்களும் தரும் ஸ்ரீ மகாலக்ஷ்மி



27-28 ஸ்ரீ லக்ஷ்மி குபேர பூஜை



41 சூரிய வழிபாடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நோக்கம்

"இந்து மதத்தின் பல அரிய தகவல்களை அறியத் தருவதே"



வாழ்க்கையில் எந்த நிலையில் இருந்தாலும், ஒவ்வொருவருக்கும் உயர்ந்த இலட்சியம் என்று ஒன்று இருக்க வேண்டும். அப்போது தான் வாழ்வில் சமுதாயத்தில் வளர்ச்சியும் மலர்ச்சியும் இருக்கும். இலட்சியம் இல்லாத வாழ்க்கை விரக்தியிலும், சோர்விலும் சலிப்பிலும் முடியும். இலட்சியம் இல்லாத வாழ்க்கை துடுப்பு இல்லாத படகு போன்றது. வாழ்க்கையில் ஓர் அர்த்தம் இருக்க வேண்டும், என்றனர் சான்றோர். நாம்-நம்மில் பலர் அப்படி அர்த்தமுள்ள வாழ்க்கை தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோமா? சிந்திக்க வேண்டும்.

பயம், சந்தேகம், வறுமை, ஏமாற்றம், சோர்வு, கோபம் விரக்தி முதலிய உணர்வுகளுக்கு மனிதன் ஆளாகும்போது அவன் கவலை கொள்கிறான். நடைப் பிணமாகிறான். கவலையே முன்னேற்றத்திற்குத் தடை. அதை மறந்து ஆக்கபூர்வமான சிந்தனைகளிலும், செயல்களிலும் நாம் ஈடுபடவேண்டும்.

நேற்று நடந்தவற்றை நினைத்து கவலைப்படுபவர்களாகவும், நாளை நடக்கப்போவதைப் பற்றி பயப்படுபவர்களாகவும் நம்மில் பலரும் வாழ்கிறோம். இதற்கு மாறாக இன்றைய வாழ்க்கையில் கவனம் செலுத்துபவர்களாக நாம் வாழ்வதே அறிவுடைமை. அதாவது நேற்றைய நாளைய கனவுகளில் சஞ்சரிக்காமல் நிகழ்காலத்தில் நாம் வாழவேண்டும். "நம்பிக்கையே வாழ்க்கை, நம்பிக்கையின்மையே மரணம்" என்று வாழ்க்கைக்கேற்ற புதிய ஒரு சித்தாந்தத்தை சுவாமி விவேகானந்தர் படைத்துத் தந்தார்.

நம்பிக்கையே உயிர், அவநம்பிக்கையே மரணம். ஊக்கத்துடன் உரிய முயற்சியை மேற்கொள்பவனை நாடி, எல்லா ஆக்கங்களும் சென்றடையும்.

'ஆற்றின் ஓட்டத்தில் கரைந்து போகும் களிமண்ணாக இல்லாமல் ஆற்றின் ஓட்டத்தையே திசை திருப்பவல்ல உறுதியான பாறாங்கல்லாகவே நான் இருக்க விரும்புகிறேன்'. இது போன்ற மனப்பான்மையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். முயற்சி என்பது வெறும் முயற்சியாக இருந்தால் மட்டும் போதாது அந்த முயற்சி விடாமுயற்சியாக கட்டாயம் இருக்கவேண்டும்.

எந்த உயர்ந்த செயலையும் ஆரம்பிப்பதில் பெருமையைத் தந்துவிடாது. மாறாக எடுத்தச் செயலை முடிப்பதாலேயே பெருமை சேரும்.

கே. யோகேந்திரன்

\- ஆசிரியர்




கௌரி
ஜுவலர்ஸ்

4/A, Fussels Lane, Galle Road, Wellawatte. (Close to Wellawatte Market)
Tel: 2360132 Fax: 0094 1 2503471 Mobile: 077 5415526


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவம் ஓர் வாழ்க்கை நெறி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குரு சீடன்

'குரு' என்ற சொல்லுக்கு இருளைப் போக்கி ஒளியை நல்குபவர் என்பது பொருள். அவர் நம்மைப் போல் புறத்தே உருவம் கொண்டு அருளுபவர். இறைவனே உயிருக்குயிராய் இருந்து அகத்தே உணர்த்தப்பட்ட ஞானிகள் சிலரும் உண்டு.

இராமகிருஷ்ணர் கூறுவார், 'சச்சிதானந்தப் பொருளே குருவாக வந்து சீடனுக்கு இஷ்ட தெய்வத்தைக் காட்டிவிட்டுப் பின், இஷ்ட தெய்வத்துக்குள் மறைந்துவிடுகிறார்' என்று.

**'கு' - சீடன்**

**'ரு' - ஒளி**

அஞ்ஞான இருளை நீக்கி மெய்ஞ்ஞான ஒளியைத் தருபவர் குரு.

## மனிதர்கள் 4 வகை

1. **மந்த நிலையினர்**
2. **மந்த தர நிலையினர்**
3. **தீவிர நிலையினர்**
4. **தீவிர தர நிலையினர்**

குருவின் அருள், ஞானம்பெறுகிற தகுதி தீவிர தர நிலையினருக்கே உண்டு.

குருவே மேலான பொருள் எனக் கருதி அவரையே பற்றுக்கோடாய்க்கொண்டு, பிரபஞ்ச வாழ்வை வெறுத்துத் துறந்தவர் தீவிர தர நிலையினர்.

இறைவன் உண்டு என்று மட்டும் நினைப்பவர் மந்த நிலையினர்.

இறைவனை நாடும் வழியை ஆராய்பவர் மந்தத் தர நிலையினர்.

இறைவனை அடைந்தே ஆக வேண்டும் என்று கருதி புளியம்பழமும் ஓடும் போல ஒட்டியும் ஒட்டாமலும் உலக வாழ்வில் உள்ளவர் தீவிர நிலையில் உள்ளவர்.

குரு என்ன செய்கிறார்?

தீட்சை மூலமாகத் தனது அருட்சக்தியை சீடர்களுக்குப் பாய்ச்சுகிறார். தீட்சை என்பது ஆன்மாவின் அழுக்கை நீக்கி ஞானம் புகட்டுவதாகும்.

## குருமார்கள்

| | | |
|---|---|---|
| **ஆதிசங்கரர்க்கு** | - | **கோவிந்தபாதர் குரு.** |
| **இராமானுஜர்க்கு** | - | **ஐந்து பேர்.** |
| **தாயுமானவர்க்கு** | - | **மவுனகுரு.** |
| **உமாபதி சிவத்துக்கு** | - | **மறைஞான சம்பந்தர்** |
| **குமரகுருபரர்க்கு** | - | **மாசிலாமணி தேசிகர்.** |
| **இராமகிருஷ்ணர்க்கு** | - | **பைரவி பிராம்மணி, தோத்தாதிரி.** |
| **விவேகானந்தருக்கு** | - | **இராமகிருஷ்ணர்.** |
| **அருணகிரிக்கு** | - | **முருகப் பெருமான்.** |
| **ஔவைக்கு** | - | **விநாயகர்.** |
| **திருமூலர்க்கு** | - | **நந்தி** |
| **சனகாதி முனிவர்க்கு** | - | **சிவபெருமான்.** |

## உபாசனா குரு

உலகின் பெரும்பாலான மதங்கள். ஆத்மானுபவத்தை நேர்முகமாகத் தன் உபாசனா குருவிடம் இருந்து உபாசகனே பெறும் முறையைப் போதிக்கவில்லை.

வியர்த்தமும் நிரார்த்தமுமான கர்மங்களையும், ஒழுக்கங்களையும் மதமெனும் பேருடன் போதித்து வீண் படாடோபம் லோகாடம் பரங்களைப் புரியும் சமூகக் குருக்கண்மாரை பிரம்மசொரூபி எனப் போற்றச் செய்கிறது. ஆனால், உபாசகன் தூலகுருக்கண்மாரை அறிவுள்ள மனிதர் என்ற தகுதிக்குமேல் மதிப்பதில்லை.

உபாசனா குரு தன் சீடனுக்கு அகமுக நோக்கை வழங்குகிறார். துயரை நீக்கிக் கொள்ளும் உண்மை நெறியைப் போதிக்கிறார்.

## சற்குரு

குருவானவர் மெய்ப்பொருளை உணர்ந்தவராய் இருக்க வேண்டும். தான் பெற்றதை மற்றவரும் பெற்று ஆனந்தம் அடைவதில் தானும் ஆனந்திப்பவராய் அவர் இருத்தல் வேண்டும். 'சத்'தை சத்தென உணர்த்துபவர் சற்குரு.

ஆதிசங்கரரின் விவேக சூடாமணி சீடனுக்கென்று சில இலக்கியங்களைக் குறிப்பிடுகிறது.

**சீடன் பக்குவம் உடையவனாய் இருக்க வேண்டும்.**

**உபதேசத்தை உள்வாங்கி சிந்தித்து, செயலாற்றி, பலனடைய வேண்டும்.**

**சத்துவகுணம், உண்மை, கருணை, ஆராய்ச்சி அறிவு உடையவராயிருத்தல் வேண்டும்.**

**குருவடி நீங்காமல் அவருக்குத் தொண்டு புரிபவராய் இருத்தல் அவசியம்.**

சித்தாந்த உண்மைப் பொருள்களையும், திரு வைந்தெழுத்தின் மாண்பினையும் உணர்த்தும் தலை மகனே குரு ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு வழிபாடு

இறையெனத்தக்க ஐந்தெழுத்தை ஓதியுதவிய குருவைத் தரிசித்தலும், குருவின் திருநாமத்தை ஓதுதலும், அவருடைய உபதேச மொழியைக் கேட்டலும், அவர்தம் அறிவுரைகளைச் சிந்தித்தலும் சீரிய நலன்களைக் தரும் என்பார் திருமூலர்.

**'தெளிவு குருவின் திருமேனி காண்டல்**

**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**

**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**

**தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.'**

(திருமந்திரம்)

**சைவசித்தாந்தம் குரு பற்றிக் கூறுவது....**


இறைவன் குருவாக வந்து ஞானம் புகட்டி உயிரைத் தன்னோடு சேர்த்துக் கொள்கிறான். அவன் ஞானமாவைச் சுத்தப்படுத்தி, ஞானம் ஊட்டிய பிறகே உயிர்கள் முக்திநிலை அடைகின்றன.

ஞானத்தை குருவின் மூலமாகவன்றிப் பெற முடியாது.

கோடிக்கணக்கான மனிதர்களில் ஒரு சிலர்க்கே ஆன்மிக தாகமும், அருள் நாட்டமும் உண்டாகிறது. அத்தகையவர்க்கே குருவின் அருள் எளிதாக வந்து வாய்க்கிறது.

ஞானப் பெறத் தவிப்பும், துடிப்பும் இல்லாமல் பல ஆன்மாக்கள் திக்கற்று அலையும், அவை மீண்டும் மீண்டும் செத்துச் செத்து பிறக்கும். அப்படி வழி தெரியாமல் அலையும் ஆன்மாக்களை தூய்மைப்படுத்தி இறைவனிடம் கொண்டு சேர்க்கும் பணியைக் குரு செய்கிறார்.

தொடரும்



பிறப்பதும், வாழ்வதும், இறப்பதும் பிரிக்க முடியா வண்ணம் பின்னிப் பிணைந்திருக்கின்றன. வாழ்க்கையின் பெரிய அதிசயம் ஒன்று உண்டு. அதுதான் உடலில் உயிர் இருக்கும் பொழுதே "இறக்கப்" பழகுவது. அப்படிப் பழகிக் கொண்டால், பின் நீங்கள் வாழ்க்கையில் ஒரு சுதந்திரப்பறவைதான் எப்படி இறப்பது?

எனக்குள் புதைந்து அடிமனத்தளத்தில் மண்டியிருக்கும் மனப்புண்களை,

வடுக்களை, ஞாபகங்களை "ஆறிக் காய" விட்டால் என்ன? வாழ்நாள் முழுவதும் அவற்றைச் சுமக்க வேண்டுமா? தீங்கிழைக்கப்பட்டமை, மனப் புண்கள் ஏற்பட்டமை உண்மை தான், ஆனால் அவை பற்றிய ஞாபகத்தை, எண்ணங்களை மறக்க விடாமல் அசைபோடுவது என் மனம்தான். அவற்றில் வேதனையையும் இன்பத்தையும் ஏற்படுத்துவதும் என் மனம் தான் என் மனமே என்னைத் தாக்குகிறது.

நற்செய்தி என்னவென்றால். ஏற்பட்ட தீங்குகளையும் மனப்புண்களையும் மறக்க வைக்கும் பாரிய சக்தி எனக்குள் இருக்கிறது. அச்சக்தியைத் தூண்டி விட்டால் உயிருள்ளபோதே நாம் "இறக்கலாம்". "சுதந்திரமாக இருக்கலாம்."

# உயிருள்ளபோதே "இறக்கலாம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து தர்ம சாஸ்திரம்

இந்த உலகம் முழுவதும் நீங்களாகவே இருந்தாலன்றி நீங்கள் நினைக்கிற மாதிரி உலகம் இருக்காது. உங்கள் வறட்டுத்தனங்களை கழற்றிவைத்துவிட்டு "எல்லோரும் நல்லவர்கள்" என்ற நம்பிக்கையுடன் பழகுங்கள்.

பிரேதத்தின் பின் போகுதல், நகத்தை வெட்டுதல், மலை ஏறுதல், சமுத்திரத்தில் குளித்தல், வீடு கட்டுதல், தூரதேச யாத்திரை செய்தல், வீட்டில் விவாகம் செய்தல், சிரார்த்த வீட்டில் புசித்தல் ஆகிய இவ்வெட்டு காரியங்களையும் கர்ப்பிணியுடன் இருக்கும் கணவன் நீக்க வேண்டும். அதே சமயம் கணவன், கர்ப்பிணியாக இருக்கும் மனைவியை எந்த விதத்திலும் துன்புறுத்தவோ அசிங்கமான வார்த்தை கூறவோ கூடாது. அப்பொழுது தான் ஆரோக்கியமான குழந்தை சுகப் பிரசவமாகும்.

ஆசைக்கு ஓர் அளவு, வரவுக்கேற்ற செலவு, இறைபக்தி இவை மூன்றும் இருந்தால் அது உன்னை வாழ்நாள் முழுவதும் மன நிம்மதியோடு வாழவைக்கும். இவையன்றி அளவுக்கு மீறிய ஆசை, வரவுக்கு மீறிய செலவு, ஆணவம், போட்டி மனப்பான்மை, கடன்பட்டாவது சாதிக்கும் நிலை இருப்பின் உன் போலி வாழ்வு ஒரு கேள்விக்குறி!

உணவை பூஜித்து உண்டால், தைரியமும் பலமும் ஏற்படுகின்றன. நிந்தித்தால் இவ்விரண்டும் அழிகின்றன. எச்சில் பட்ட உணவை ஒருவருக்கும் கொடுக்கக் கூடாது. உண்ணும் பொழுது பாதியில் எழுந்தால் பின் உண்ணலாகாது. வயிற்றை அரைப்பங்கு உணவாலும், கால் பங்கை ஜலத்தாலும் நிரப்பி, மீதி கால் பங்கை காற்று செல்வதற்கு வழிவகுக்க வேண்டியது. ஐம்பது வயதுக்கு மேல் இரவில் பால், பழம் மட்டும் சாப்பிட வேண்டியது. இதனால் பிணியின்றி ஆயுள் விருத்தியடையும்.

பெண்களுக்கு விவாகத்தை உபநயனமாகவும், பார்த்தாவுக்குப் பணிவிடை செய்வதை வேதமாகவும், வீட்டைக் காப்பாற்றுவதை தர்மமாகவும் கூறப்பட்டுள்ளது. கணவனே பெண்களுக்கு முதல் தெய்வமாக கூறியிருப்பதால் கணவன் எவ்வளவு மூர்க்கம் உள்ளவனாக இருந்தாலும் அவனே தெய்வம் ஆவான்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாதமும், அம்பிகை வழிப்பாடும்!



ஆடி மாதம்! ஆடி அசைந்து போகாமல் ஆடிச் செவ்வாய், ஆடி வெள்ளி, ஆடிப்பூரம், ஆடிக்கிருத்திகை, ஆடி வேல்விழா, ஆடி அமாவாசை என அத்தனை விரதங்களையும் கொண்டு செல்லும் சிறப்பு மிக்க மாதம். அம்பிகையான ஈஸ்வரியை வழிப்பட சிறந்த மாதமாக ஆடி மாதம் விளங்குகின்றது.

ஆடிமாதம் வரும் செவ்வாய் கிழமைகளில் பெண்கள் எண்ணெய் தேய்த்து, மஞ்சள் பூசிக்குளித்து விரதம் இருந்து அம்மனை வழிப்பட்டு வந்தால் அவர்களது மாங்கல்ய பலம் கூடும். மூத்த சுமங்கலிகள் வழிக்காட்ட இளையப் பெண்கள் விரதத்தை தொடங்கலாம்.

ஆடிவெள்ளிக் கிழமைகள் தனிச்சிறப்பு மிக்கவையாக சொல்லப்படுகிறது. இந்நாளில் நாகதோஷம் உள்ளவர்களும், ராகு, கேது.

மாவிளக்கு ஏற்றி வழிப்படுவதால் ஆரோக்கியம் சீராகும். மேலும் இந்நாட்களில் அம்மன் ஆலயங்களில் கூழ் வார்ப்பதும், கஞ்சி வார்ப்பதும் மிகவும் விஷேடம் இதனை ஆடிக் கஞ்சி (கூழ்) என்பர்.


ஆடிக்காற்றில் அம்மியே பறக்கும்! எனும் போது தூசுகள் பறப்பது எம்மாத்திரம். அதனோடு வெப்பமும் சேர்ந்துக் கொள்ள வெப்ப நோய்களும் ஏற்படும். இதனை தடுக்கவே அம்மன் ஆலயங்களில் கஞ்சி வார்த்து அனைவருக்கும் கொடுப்பார்கள். இதில் அதிமதுரம், சீரகம், திப்பிலி, மிளகு, கடுகு என இன்னும் பல மூலிகைகள் கலந்து காய்ச்சுவார்கள். இதனை அருந்துவதால் தொற்று நோய்கள் வராது.

மேலும் அம்மனுக்கு விரதமிருந்து! வேப்பிலைமாலை சாற்றி, எலுமிச்சைகனிமாலை சாற்றி வெப்ப நோய் தீர்க்க வழிப்படுவதும் காலகாலமாய் நடைபெறும் வழக்கமாகும். கரும்பு, இளநீர், பால், தயிர், சந்தனம், குங்குமம் ஆகியவற்றால் அபிஷேகம் செய்து அம்பாளை வழிப்பட்டு மனம் குளிரச் செய்து அருளைப்பெறலாம்.

ஆடிமாதம் வருகின்ற பூரத்தன்று அம்பிகை பூப்பெய்திய நாளாக விளங்குகின்றது. அன்று அம்பாள் ஆலயங்களில் அன்னையை அலங்கரித்து, ஆரத்திசுற்றி, விஷேட சடங்குகள், வழிப்பாடுகள், பூஜைகள், பால் அபிஷேகங்கள் என்பன இடம் பெறும். முக்கியமாக அன்று பொங்கல், கழி, பிட்டு என்பன நிவேதனப் பொருட்களாக படைப்பார்கள். அம்பாளின் அருளை பெறுவதற்காக ஆலயங்களில் மங்கையர்கள் நிறைந்து காணப்படுவார்கள். எல்லாப் பெண்களுக்கும் அன்று குங்குமபிரசாதம் வழங்கப்படும்.

ஆடிக்கிருத்திகையன்று முருகப்பெருமானை வழிப்பட சிறந்த நாளாக திகழ்கிறது. தலைநகரில் ஆடிவேல் விழா சிறப்பாக நடைப்பெற்றுவது கண்கூடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோஷங்களால் பாதிப்பு உள்ளவர்களும் ஆடிமாதம் வளர்பிறை பஞ்சமி திதியில் நாகதேவதையை வழிபட்டு விரதம் இருந்து வர புத்திரதோஷம் நிவர்த்தியாகும். புத்திரபாக்கியம் உள்ளவர்களின் குழந்தைகளுக்கு! நீண்ட தோஷமற்ற ஆயுள் விருத்தியும் உண்டாகும்.

ஆடி அமாவாசை பித்ரு காரியங்கள் செய்வதற்கு உரிய தினம். ஆடி அமாவாசையன்று புண்ணிய நதிகளில் கடலில் தீர்த்தமாடல் எமது பாவத்தை கழுவுவதோடு: பிதிர்களை நினைத்து செய்யும் வழிப்பாடு, பிதிர்கள் நற்கதி பெற உதவுகின்றது. இதன் மூலம் நாமும், நம் சந்ததியினரும் நற்பயனைப் பெற்று வாழ வழிவகுக்கும் ஒரு புனித நாளாக ஆடி அமாவாசை விளங்குகின்றது. இந்த ஆடி மாதத்தில் அம்பிகையை வழிப்பட்டு எல்லா நன்மைகளையும் அடைவோமாக!

*திருமதி. பவானி பாலசுப்ரமணியம்*
*வெள்ளவத்தை.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும்

## (ஆன்மிக ஐயம்)





கைகளில் அர்ச்சனை தட்டையோ, புஷ்பம் முதலான பொருட்களையோ வைத்துக் கொண்டிருப்பவர்கள், யாரையும் (தலையைக்குனிந்து) வணங்கக்கூடாது. இப்படிச்செய்தால் கையில் உள்ள புஷ்பம் முதலிய பூஜை பொருட்கள் நிர்மால்யமாக (பூஜை செய்யப்பட்டதாக) ஆகிவிடும், அது மறுபடி பூஜைக்கு உகந்ததாக ஆகாது.)

அக்னியில் ஹோமம் செய்யும் போது (புகையாக இருக்கிறது என்பதற்காக) கண்ணை மூடிக் கொண்டு ஹோமம் செய்யக் கூடாது. (இவ்வாறு கண்ணை மூடிக்கொண்டதால் தான் திருதராஷ்டிரன் குருடராகப் பிறந்ததாக மஹாபாரதம் கூறுகிறது).





ஆலயங்களில் நவக்ரஹங்களை ஒருபோதும் அப்ரதஷிணமாக (இடது பக்கமாக) சுற்றக்கூடாது (வலது பக்கமாக (ப்ரதஷிணமாக)த் தான் சுற்றிவர வேண்டும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## (ஆன்மிக ஐயம்)



வீட்டில் பூஜை ஹோமங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, அந்த இடத்தை விட உயரமான இடத்தில் (நாற்காலி மீது) உட்காரக் கூடாது.

அமாவாசை மற்றும் பௌர்ணமிக்கு மறுநாளான பிரதமையன்று எந்த ஒரு புதிய கல்வியையும் கற்றுக் கொள்ளக்கூடாது, கற்றுக்கொண்ட பாடத்தை மனப்பாடம் செய்வதற்காக படிக்கவும் கூடாது. (இது நினைவில் நிற்கும் பாடங்களையும் மறக்கச் செய்து விடும்)..





சிரார்தத்திற்கு முன்பு அல்லது முதல் நாள் தயாரிக்கப்பட்ட பட்ஷணம் ஊறுகாய், தயிர், முதலான எந்த உணவுப்பொருளையும் சிராத்தத்தில் உபயோகப்படுத்தக் கூடாது. (சிரார்த்தத் தன்றுதான் அவற்றை தயார் செய்ய வேண்டும்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூணூல் அணிவதன் தத்துவம் என்ன?



காயத்ரியைச் சொல்லுவதற்கு ஒருவன் உபதேசம் பெறும் புண்ணியச் சடங்கே உபநயனம் என்று, சொல்லப்படுவது. காயத்ரி என்பது தாய்மையின் வடிவம். அதைச் சொல்லி நம்முடைய மனதைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பை நமக்கு ஞாபகப்படுத்துவதே பூணூல், அதை அணிந்து ஞானப் பார்வைக்குத் தகுதி பெறுவதனாலேயே அந்தச் சடங்கும் உபநயனம் என்று சொல்லப்படுகிறது. இந்த மாறுதலையும், தகுதியை அடைவதையும் குறிப்பிடுவதும், அடையாளம் காட்டுவதுமே பூணூல் அணிவதன் பின்னணியாகும்.

இதில் மூன்று புரிநூல்கள் இருக்கின்றன. பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மூன்று மூர்த்திகளையும் இது அடையாளம் காட்டுகிறது. மகாசரசுவதி, மகாலட்சுமி, மகாகாளி ஆகிய மூன்று தேவியரையும் இது நினைவுபடுத்துகிறது. சத்வ, ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களையும் இது உருவமாகக் காட்டுகிறது. கடந்தவை, நிகழ்பவை, நடக்கப் போகிறவை ஆகிய மூன்று காலங்களையும் இது உணர்த்துகிறது. மனிதன் அனுபவித்தே ஆக வேண்டிய சுவர்க்கம், பூமி, பாதாளம் (நரகம்) ஆகியவற்றையும் இது அடையாளம் காட்டுகிறது.


அந்த முப்புரி நூலில் உள்ள முடிச்சு பிரம்மத்தை உணர்த்துவது. அது உடம்பை தீய சக்திகளிலிருந்து காப்பாற்றுகிறது. மூன்று நூல்கள் இத, பிங்கள, சூஷ்ம நாடிகளில் மூலம் குண்டலினி சக்தி பரவி பிராணசக்தியை நாம் உணரவேண்டும் என்று வழிகாட்டுகின்றன.

தான் என்ற அகம்பாவத்தைத் துறக்கும் யாகத்தைச் செய்து அதில்தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் பொறுப்பை செய்வதாலேயே இதற்கு யக்ஞோபவீதம் என்ற பெயரும் இருக்கிறது.

வீட்டில் யாரேனும் இறந்துபோனாலும், குழந்தை பிறந்தாலும், முன்னோருக்குச் சிரார்த்தம் செய்வதாலும், உபகர்மாவின் போதும் பூணூலை மாற்றிக்கொள்ள வேண்டும். மற்றபடி நான்கு மாதங்களுக்கு ஒருமுறை அதை மாற்றிக்கொள்ள வேண்டும்.

## பற் கடித்தால் தீங்கு வருமா?

சிலர் ஈடுபடும் கெட்ட பழக்கவழக்கங்களில் பற்கடிப்பும் ஒன்று. இது தீங்கு விளைவிக்கும் என்பது நம்பிக்கை. இது பற்கள் தேய்ந்து போகும் ஒருவித நோய்க்குக் காரணமாகும் என்று மருத்துவம் கூறுகின்றது. இதற்கு ஆயுர் வேதத்தில் ஒரு நிவாரணமும் உண்டு. கேழ்வரகைப் பாலில் சேர்த்து காய்ச்சிக் குடிக்க வேண்டும்.





பூஜைக்கு உபயோகிக்கும் மணி, வெற்றிலை, அனைத்து வகையான பழங்கள், அனைத்து வகையான பூக்கள், தர்பங்கள், ஸமித்துகள், வாழை இலை, முதலியவற்றை பூமியில் (தரையில்) நேரடியாக வைக்கக் கூடாது. (தட்டு போன்ற பொருட்களின் மீது வைக்கவேண்டும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய சிற்பங்கள். சித்திரங்களாக!

# ஸ்ரீ வைகுண்டம்

ஸ்ரீராமன் - இடக்கையில் கோதண்டம் திகழ, பாணம் பற்றியிருக்கும் வலக் கரத்தால் ஆஞ்சநேயனை அணைத்தபடி, அன்பு மயமாக அருள்கின்றான். ஆஞ்சநேயனோ விநயத்துடன் பணிவு காட்டி நிற்கிறான். அருகில் நிற்கும் சுக்ரீவன் மட்டும் என்னவாம்? அவனிடமும் பணிவும் பக்தியும்! அனைவருக்கும் பின்னால் கதாயுதம் ஏந்தி நிற்கிறான் விபீஷணன்!

அனைவரும் போருக்கு ஆயத்தமாகத் திகழும் இந்தக் காட்சியை, கவிஞர்கள் தங்களின் கற்பனையால் சிலாகிக்க, அதையே தெய்வீகச் சிற்பமாக்கி நம் கண்முன் நிறுத்திவிட்டார்கள் சிற்பிகள். எங்கே தெரியுமா? பாற்கடல் தெய்வம்... நம் உள்ளம் கவரும் கள்வனாய், கள்ளர்பிரான் எனும் திருப்பெயர் கொண்டு அருள்பாலிக்கும் ஸ்ரீவைகுண்டம் தலத்தில்தான்!

திருநெல்வேலி... திருச்செந்தூர் செல்லும் வழியில் சுமார் 25 கி.மீ. தொலைவில் இருக்கும் இந்த ஊர், பாண்டி நாட்டின் 18 திருப்பதிகளில் ஒன்று: நம்மாழ்வார் பாடிய நவ திருப்பதிகளில் ஒன்றாகவும் திகழும் தலம்.

இருப்போரிடம் கொள்ளையடித்து இல்லாதவருக்கு வழங்கும் குணம் கொண்டவன் அந்தத் திருடன். பெருமாள் பக்தனும்கூட! அவன், 'திருடும் பொருட்களில் பாதி உமக்கு' என்று பெருமாளிடம் சங்கல்பித்துக் கொண்டானாம். அதன்படி, கொள்ளையடிப்பதில் பாதியைச் சமர்ப்பித்தும் வந்தான். ஒருமுறை, கூட்டாளிகளுடன் அரண்மனையில் திருடித் திரும்பும் வேளையில், வசமாகச் சிக்கிக் கொண்டான்.


ஸ்ரீ ராமன்

அவனைக் காப்பாற்றும் பொருட்டு பெருமாளே அந்தக் கள்ளனின் உருவில் வந்து அருள்செய்தாக விவரிக்கிறது ஸ்தல புராணம்.

கள்ளர்பிரான் கோயில் சிற்பங்களும் நம் மனதைக் கொள்ளை கொள்வதுதான் அதிவிசேஷம்! ஆமாம்.... இக்கோயிலின் திருவேங்கடமுடையான் மண்டபத்தில்தான், மேற்சொன்ன சிற்பக் காட்சி உட்பட ஏராளமான சிற்ப பொக்கிஷங்கள்! மதுரை நாயக்க அரசரின் உதவியோடு, மலையப்ப பிள்ளையன் என்பவரால் கட்டப்பட்ட மண்டபம் இது.

'கண்ணால் காண்பதும் பொய்' என்பார்கள். உண்மைதான். குதிரை என்றும், யானை என்றும் நம்பி அருகில் சென்றால், கலை ஜாலம் காட்டுகின்றன சிற்பங்கள்! பெண்கள் பலர் சேர்ந்து நின்று யானையாகவும், குதிரை போலவும் ஒரு காட்சியை தோற்றுவிக்கிறார்கள். பெண்ணொருத்தியின் கூந்தலே குதிரையில் வாலாகவும், மற்றொருத்தியின் கையே யானையின் வாலாகவும் அமைத்திருப்பது, இந்தச் சிற்பச் சிறப்புக்கு ஓர் உதாரணம். குதிரையின் மீது மன்மதன்: யானையின் மீது ரதி இருப்பது அழகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனுமனை அணைத்தபடி..

இன்னொரு சிற்பக் காட்சி..... வேடன் ஒருவனின் காலில் முள் வைத்துவிட, பக்குவமாக அதை எடுத்துவிடுகிறாள். அவன் துணைவி. வேடனின் முகத்தில் வலியின் வேதனையும், பரிதவிப்புடன் முள்ளை எடுத்துவிடும் வேட்டுவச்சியின் முக பாவனையும்... சிற்ப அற்புதம்! இதேபோன்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வீரபத்திரர்

குறவன்-குறத்தி, அவர்களின் குடும்ப வாழ்க்கையை விளக்கும் சிற்பங்களும் மிக அழகு!

நவக்கிரக தோஷங்கள் நீங்க, தென்னகத்தின் நவ திருப்பதிகளையும் தரிசிக்க ஆயத்தமாகும் பக்தர்கள், இந்தத் தலத்தில் இருந்தே யாத்திரையை துவங்குகிறார்கள்.

ஒரு பிரளயத்தின்போது, வேதங்களை சோமுகாசுரனிடம் பறிகொடுத்த பிரம்மன், இங்கு வந்து தந்தையை குறித்து தவம் செய்தார். அவருக்குக் காட்சி தந்த பரம்பொருள் வேதங்களை மீட்டுக்கொடுத்தது. பின்னர், பிரம்மனின் வேண்டுதலின்படி ஸ்ரீவைகுண்ட




தமிழ் வேதம் பிறந்தது..



மத்தளம் முழங்க..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குதிரையும்..

யானையும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாதனாக இங்கே கோயில்கொண்டாராம், ஸ்வாமி. இந்தத் தலத்தைத் தரிசிக்க, விண்ணில் உள்ள வைகுண்டத்தை தரிசித்த பலன் கிடைக்குமாம். ஆமாம்.... பூலோக வைகுந்தமாகவே திகழ்கின்றன தலமும் கோயிலும். இங்கிருக்கும் சிற்பங்களும் அதற்கொரு காரணம்!

ராஜ கோபுரத்தின் வடக்குப்புறத்தில் உள்ள சுதைச் சிற்பம், திரிவிக்கிரமனின் விஸ்வரூப கோலத்தை, மகாபலியை பாதாளத்துக்கு அழுத்திய சரிதத்தை அழகாக எடுத்துரைக்கிறது. கோபுரத்தின் தென்புறத்தில், தேவியருடன் பெருமாள். ஆதிசேஷக் குடையின் கீழ் அமர்ந்திருக்கும் பெருமாளின் திருவழகும், கால் மடித்து அமர்ந்திருக்கும் தேவியரின் வடிவழகும்... சிற்பத் திறனுக்குச் சான்று. மூவகைத் தத்துவத்தின் முடிவு கண்ட சதுர்மறை புரோகிதன் என்று சிறப்பிக்கப்படும். நம்மாழ்வார் தமிழ் வேதம் பாடினார். அவர் பாடப்பாட, அருமைச் சீடரான மதுரகவியாழ்வார் எழுதிக்கொண்டே வந்தார். இவர்களின் காலத்துக்குப் பிறகு, நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தை தொகுக்கும் ஆவலில் ஆழ்வார் திருநகரிக்கு நாதமுனிகள் வந்ததாகவும், இவர் யோக திருஷ்டியால் நம்மாழ்வாரைக் கண்டு நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்தைப் பெற்றக் கொண்டதாகவும் குருபரம்பரைக் கதைகள் தெரிவிக்கின்றன.

அப்படி ஆழ்வார் திருநகரி வந்த நாதமுனிகள், தமது யோக தரிசனத்தில்... நம்மாழ்வார் பாட, மதுரகவியாழ்வார் சுவடியில் எழுதி வந்ததாக கண்டிருக்கக் கூடும். அந்தப் பாடல்களைக் கேட்டு இவர் தாளம் போடுவதாக அமைந்திருக்கும் ஒரு சிற்பத்தையும் ஸ்ரீவைகுண்டம் கோயிலில் காணலாம். இந்த சிற்பத் தொகுப்பில் உறங்காப்புளியும் இருப்பது விசேஷம்!

சிவகோபம், வீரபத்திரக் கடவுளாகி வந்து, தட்சனை அழித்த கதையைப் புராணங்கள் கூறும். அதையே, கள்ளர்பிரான் கோயிலில் சிற்பமாக்கி சிறப்பித்திருக்கிறார்கள்! கோயில் மண்டபத் தூண் ஒன்றில் ஆஜானுபாகுவாக நிற்கிறார் வீரபத்திரர். காலடியில் தட்சன். தூக்கிய திருவடியும், அருகில் மத்தளம் வாசிக்கும் வீரனும், வீரபத்திரரின் முகம் காட்டும் கோபாவேசமும், ஆடை அலங்காரங்களும் தத்ரூப தரிசனம்!



# கடவுளின் அருள்!

## இனிக்கும் இளநீர்

தண்ணீர் உலகத்தில் எல்லோருக்கும் பயன்படுவது. இது இனிமையாகவே இருக்கும் இடம் தேங்காய்க்குள்ளே இருக்கும் இளநீர். ஆக, அதுவே உலக ஆசைகளின் அடையாளமாக விளங்குகிறது. மேலே உள்ள கெட்டியான ஓட்டை நம்பி அது உள்ளே இருக்கிறது. அது உடையாது என்றும் இளநீர் நம்பி இருக்கிறது. ஆனால் காலத்தே உடைக்காமற் போனால் இளநீர் பயனற்றுப் போய்விடும். அதேபோல நம்முடைய உடம்பு உறுதியானது என்று எண்ணி ஆசைகளை வளர்க்கிறோம். ஆனால் வயதுக்கேற்ற மனப்பக்குவத்தை அடைந்து, உடம்பு சாசுவதமானது அல்ல என்று புரிந்து கொள்ளாவிட்டால் இந்த ஆசைகளே நம்மைக் கெடுத்து விடும்.

பகவான் சத்ய சாயிபாபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த இதழின் தொடர்ச்சி..........

# இலங்கையின் புகழ்பெற்ற பிள்ளையார் கோயில்கள்

**ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்**

**புதுக்குளம் வவுனியா**

1850 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. ஊஞ்சல் பாடல்கள் உண்டு. மூலமூர்த்தி விநாயகர். பரிவார மூர்த்திகள்-வைரவர், முருகப் பெருமான். மாணிக்கவாசக சுவாமிகளும் உளர். பிள்ளையார் கதை, விநாயகர் சதுர்த்தி, திருவெம்பாவை சிறப்பாக நடைபெற்று வருகின்றன. விசேட நாட்களில் அலங்காரத் திருவிழா நடைபெற்று வருகிறது.

**மாமாங்கப் பிள்ளையார் கோவில்**

**மாமாங்கேஸ்வரம், மட்டக்களப்பு**

கிழக்கிலங்கையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கமைந்த தலம் மாமாங்கேஸ்வரமாகும். மூலஸ்தானத்தில் சிவலிங்கம் உள்ளது. எனினும் பெரும்பாலும், விநாயகர் அங்கியுடனே சிவலிங்கம் காட்சியளிப்பதால் மாமாங்கப் பிள்ளையார் என்று பக்தர்களினால் அன்பாக மூலமூர்த்தி அழைக்கப்படுகிறார்.

இத்தலத்திலுள்ள சிவலிங்கம் ஸ்ரீ இராமபிரானால் ஆக்கப்பட்டுப் பூசிக்கப்பட்டதென ஐதீகம் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வருடாந்த உற்சவம் ஒன்பது தினங்கள் நடைபெற்று தீர்த்தத்துடன் முடிவடைகிறது. ஆடி அமாவாசைத் தினத்தன்று வருடாந்த தீர்த்தோற்சவம் நடைபெறும். தீர்த்தோற்சவத்தன்று சிவன், சக்தி, பிள்ளையார் ஆகிய மூன்று மூர்த்திகளும் எழுந்தருளிக் காட்சி கொடுப்பர். சிவனுக்கும் பிள்ளையார்க்கும் ஒன்றாகப் பூசை நடைபெற்று வருகிறது. இவற்றைத் தவிர விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

விநாயக சஷ்டி காலத்தில் கஜமுகாசுரன் போர் விழா மிகக் கோலாகலமாக இடம்பெறுகின்றது. 1880 ஆம் ஆண்டில் இங்கு முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. அக்காலம் முதல் கொடியேற்றத்தை அடுத்து ஐந்து திருவிழாக்கள் நடைபெற்று தீர்த்தோற்சவம் இடம் பெற்றுள்ளது. தற்பொழுது திருவிழா முறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

## ஸ்ரீ மாவேற்குடாப் பிள்ளையார் கோவில்

### திருப்பழுகாமம், பெரியபோரதீவு

கிழக்கு மாகாணத்தில் குளக்கோட்டரசராலும், அவர் பிரதிநிதிகளாலும் புனருத்தாரணஞ் செய்யப்பட்ட சம்புநாவற்பதி (கோயிற்போரதீவு) ச் சித்திவேலர் ஆலயத்துக்குத் திருப்பணி வேலைகளுக்காகத் தென்னிந்தியாவிலுள்ள காரைக்கால், மருங்கூர் ஆகிய இடங்களிலிருந்து ஆறு குடி வேளாளர் வரவழைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் அத்தியார்குடி, வைத்தியனார்குடி என்று அழைக்கப்பட்டனர். தமது இருப்பிடமாகிய ஸ்ரீ மாவேற்குடாவில் கோவில் ஒன்றை அமைத்து முருகப்பெருமானின் தங்கவேல் ஒன்றை மூலமூர்த்தியாக வைத்து வழிபட்டு வந்ததாகவும், பின்னர் இவர்கள் குடிபெயர்ந்து பழுகாமம் சென்றபோது இந்த இடம் காடாகி விட்டதாகவும் கர்ண பரம்பரைக் கதை கூறுகிறது. அப்பொழுது கோவிலின் பெயர் "ஸ்ரீ மாவேற்குடையார்" என்றிருந்தது. பின்னர் பிள்ளையாரும் இருப்பிடம் கொள்ள, "ஸ்ரீ மாவேற்குடாப் பிள்ளையார் கோவில்" எனப் பெயர்பெற்றது.

போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட புராதன ஆலயங்களில் இதுவும் ஒன்று. 1960 ஆம் ஆண்டில் புனருத்தாரணம் செய்யப்பட்டது. மூலமூர்த்திகளாக பிள்ளையாரும் முருகனும் உள்ளனர். பரிவார மூர்த்திகள் நாகதம்பிரான், ஸ்ரீமாவேற்குடாக்காளி. தினமும் ஒரு காலப் பூசை. ஆனி உத்தரம், கந்தசஷ்டி, விநாயகர் விரதம், நவராத்திரி போன்ற தினங்களில் விஷேட பூசை வழிபாடுகள் உண்டு.

## ஸ்ரீ விநாயகர் கோவில்

### கட்டுக்குளம், திரியாய், திருகோணமலை

குளக்கோட்டு மன்னன் கல்வெட்டு வரலாற்றின்படி கோணேசர் ஆலயத்திற்குத் தாமரை, நூல் திரியும், பசு நெய்யும் பூசைக்கு வழங்கும் புனிதப் பணியை இக்கிராம மக்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அதற்காக அக்கிராமத்தில் ஏழு தாமரைக் குளங்கள் அமைக்க வேண்டுமென்றும் பரராசசேகரன், செகராசசேகரன் என்ற சிற்றரசர்களுக்கு குளக்கோட்டு மன்னன் ஆணை பிறப்பித்தானென்றும் கட்டளையைக் கருத்திற் கொண்டு திருக்குளங்கள் அமைக்கும் சீரிய பணியை சிற்றரசர்கள் மேற்கொண்டார்களென்றும் சாசனம் சான்று பகர்கிறது. திரி தாமரை நூற்திரி, ஆய் - பசுநெய், தாமரை நூற்திரியும் பசுநெய்யும் வழங்கக் கடமைப்பட்டவர்கள் இக்கிராமத்தில் வாழ்ந்தமையால் திரியாய் என்ற காரணப் பெயர் இக்கிராமத்திற்குச் சூட்டப்பட்டது. திரியாயில் அமைக்கப்பட்ட ஏழு குளங்களில் கட்டுக்குளம் ஒன்றாகும். கட்டுக்குளத்தின் கட்டுவேலை நடைபெற்றுவரும் நாட்களில் தினமும் இராக்காலங்களில் யானைகள் வந்து குளக்கட்டை மிதித்துச் சிதைத்து அட்டகாசம் புரிந்து வந்ததையிட்டு மன்னன் கலங்கிக் கோணேசப் பெருமானைத் தியானித்து வந்தான். ஒரு நாள் இரவு, மன்னன் கனவிலே இறைவன் தோன்றி அமைக்கும் குளத்திற்கு அருகாமையில் கீழ்த்திசையிலே வீரமர நிழலிலே விநாயகப் பெருமான் வீற்றிருக்கிறார். அவரைப் பூசித்துக் கட்டு குளம் என்று திருவாய் மலர்ந்தருளினார் என்றும், இக்கட்டளையை ஏற்ற குளத்தை நோக்கிச் சென்றபோது வீரமர நிழலிலே விநாயகப்பெருமான் வீற்றிருந்ததாகவும், அவரைப் பூசித்துக் குளத்தைக் கட்டியதாகவும் வரலாறு உண்டு. "வீரையடி விநாயகரை வழிபட்டு கட்டுகுளம்" என்று அசரீரி ஆணையிட டமையினால் அக்குளத்திற்குக் கட்டுக்குளம் என்ற பெயர் வந்தது. நாளடைவில் அது கட்டுக்குளம் என்று வழங்கலாயிற்று. இக்குளத்தில் ஆண்டுதோறும் மலரும் தாமரை மலர்களைக் கொய்து வீரையடி விநாயகருக்குச் சமர்பித்த பின்னரே திரி தயாரிப்பர்.

பொங்கல் விழா, சித்திரைப் பௌர்ணமி போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தஞ்ச விநாயகர் கோவில்

**6ஆம் வட்டாரம், திரியாலை, திருகோணமலை**

இருநூற்றைம்பது வருடங்கள் பழமை வாய்ந்தது. கல்லம்பத்தை என்ற பகுதியில் முன்னொருகால் பயிர்களுக்கு நோய் ஏற்பட்டது. அத்தோடு யானைகளும் அட்டகாசம் புரிந்ததாகக் கூறப்படுகிறது. தஞ்சாவூர் தாடிச்சாமியார் என்பவரால் ஒரு குளத்தில் கண்டெடுக்கப்பட்ட விநாயகர் விக்கிரகம் பூசைக்கு வைக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து பயிர்களின் நோய்கள் நீங்கியதுடன், யானைகளின் அட்டகாசமும் நின்று விட்டது என்பது வரலாறு. அந்த நேரத்திலிருந்து பொங்கல் விழா இங்கு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தஞ்சாவூர்ச் சுவாமியாரால் ஸ்தாபிக்கப்பட்ட கோயில் என்பதால் தஞ்ச விநாயகர் கோயில் என்றும், கல்லம்பத்தைப் பகுதியில் அமைந்திருப்பதால் கல்லம்பத்தை விநாயகர் கோயில் என்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. தினமும் ஒருகாலப் பூசை நடைபெற்று வருகிறது. விதைப்பு, அறுவடை காலங்களிலும் விசேட பொங்கல் நடைபெறும்.

## ஆனைப்பந்திப் பிள்ளையார் கோவில்

**புளியந்தீவு மட்டக்களப்பு**

கிழகிலங்கையின் மட்டக்களப்புத் திருநகரில் ஆனைப்பந்திப் பதியில் எழுந்தருளியுள்ளவர் ஆனைப்பந்திப் பிள்ளையார். புலியன் என்ற வேடர் குலத் தலைவன் அரசு புரிந்த இடமாகையால் முன்னாளில் இவ்விடம் "புலியந்தீவு" என அழைக்கப்பட்டு, பின்னாளில் "புளியந்தீவு" எனப் பெயரைக்கொண்டது. இவ்வாலயத்தில் மூலமூர்த்தியாகப் பிள்ளையார் எழுந்தருளியுள்ளார். இங்கு சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானும், தேவியர் சமேத சுப்பிரமணியரும், பழனியாண்டவரும், மனோன்மணி அம்பாளும், வைரவர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகளும், பரிவார மூர்த்திகளாக எழுந்தருளியுள்ளனர். அத்தோடு சிவலிங்கம், பார்வதி அம்பாள் ஆகிய மூர்த்திகளுக்கும் தனித்தனிக் கோவில்கள் இங்குள்ளன.

இக்கோவிலில் தினமும் மூன்று காலப் பூசைகள் நடைபெறுகின்றன. வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் பூசை மிகச் சிறப்பானது. மாத உற்சவமாக விநாயகப் பெருமானின் சதுர்த்தி உற்சவமும், அம்பாளின் பௌர்ணமிக்கான விசேட அலங்காரப் பூசையும் நடைபெற்று வருகின்றன. சித்திரா பௌர்ணமிக்குத் தீர்த்தோற்சவம் வரக்கூடியதாக முதல் பத்து தினங்களுக்கும் உற்சவம் நடைபெற்று அமிர்தகளி மாமாங்கேஸ்வரர் ஆலயத் திருக்குளத்தில் தீர்த்தோற்சவத்துடன் வருடாந்த மகோற்சவம் முடிவடையும்.

இம் மகோற்சவத்தில் வேட்டைத் திருவிழாவின் போது சுவாமி, திரௌபதை அம்மன் கோவிலுக்கு எழுந்தருளி வேட்டையாடி தமது கோவிலுக்குத் திரும்புவார். ஆனி உத்தரத்தன்றும், மார்கழித் திருவாதிரையன்றும் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கான அபிஷேகமும், ஆவணி ஓணத்தன்று பிள்ளையாருக்கும், மனோன்மணி அம்பாளுக்கும் மணவாளக்கோல விழாவும் அதி சிறப்பாக நடைபெறுகின்றன. புரட்டாதிச் சனிக்கிழமைகளில் விசேட பூசைகளும் நடைபெறுகின்றன. கார்த்திகை சோமவாரத்தில் விசேட அபிஷேக வழிபாடுகளும், சிறப்பாக நடைபெறுகின்றன. கேதார கௌரி விரதமும், விநாயக சஷ்டி விரதமும் இங்கு சிறப்பாக இடம்பெறுகின்றன.

## ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்

**பாண்டிருப்பு 1 ஆம் குறிச்சி கல்முனை**

450 வருடங்களுக்கு முன்பாக கலிங்க தேசத்துச் சிற்றரசன் மன்னசிங்கன் இவ்வாலயத்தைப் பரிபாலித்து வந்ததோடு திருப்பணிகளைச் செய்து காணிகளையும் (நிந்தகம) வழங்கியுள்ளார் என்பது வரலாறு. மட்டக்களப்பு மான்மியம், தாதன் கல்வெல்டுக்கள், உறுதி சாதனங்களில் இக்கோவில் பற்றி கூறப்பட்டுள்ளது. புரட்டாதிப் பூரணைக்கு முன்னுள்ள பதினெட்டு நாட்களில் வருடாந்த உற்சவம் நடைபெறுகிறது. மூலமூர்த்தி விநாயகர், பரிவார மூர்த்திகள் - முருகன், விஷ்ணு, நவக்கிரகங்கள், வைரவர். தினமும் பூஜை உண்டு. விஷேட தினங்களில் விஷேட பூசை வழிபாடுகள். பழங்காலந்தொட்டு பதினெட்டுக் குடிவழியினரின் பெண் உரிமைப்படி பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

## ஸ்ரீ நந்தவனப் பிள்ளையார் கோவில்

**2 ஆம் குறிச்சி, காரைதீவு**

தவத்திரு விபுலானந்த அடிகளின் பிறந்த இடமான காரைத்தீவில் உள்ள இக்கோயிலில் அடியார்கள் கூட்டுப் பிரார்த்தனை நடத்தி வந்தது உண்டு. ஸ்தாபிக்கப்பட்டு 100 வருடங்களுக்கு மேலாகிறது. சேரநாட்டிலிருந்து யாத்திரையாக இங்கு வந்த அம்மையார் ஒருவர் விக்கிரகம் ஒன்றைக்கொண்டு வந்து இங்கு வைத்து வணங்கி வந்ததாகவும் கூறப்பட்டுவருகிறது. பின்னர் பிள்ளையார் விக்கிரகம் வயல் ஒன்றுக்குள் கண்டெடுக்கப்பட்டுப் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும் வரலாறு. ஆலயத்தைச் சுற்றி வயல்கள், தடாகங்கள், பூந்தோட்டங்கள் இருப்பதால் ஸ்ரீ நந்தவனப் பிள்ளையார் எனப்பெயர் பெற்றார். நித்திய பூஜை உண்டு. திருவெம்பாவை தினங்களில் உற்சவம் நடந்து திருவாதிரைத் தினத்தன்று முடிவுறும். ஆடி அமாவாசையன்று தேர்த்திருவிழாவும் தீர்த்தமும் நடைபெறுகின்றன. குளத்துவெளிப் பிள்ளையார் எனவும் அழைக்கப்பட்டு வருகின்றார்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கேது

# நவக்கிரகங்கள்

(புரசு மரத்தின் பூப்போன்ற செந்நிறம் கொண்டவன். நட்சத்திரங்கள் - கிரகங்களில் தலையானவன், கோபி, கோபத்தின் உருவுடையோன். அந்தக் கேதுவைப் பணிகிறேன்)

மேலே குறிப்பிட்ட சுலோகப் பொருளின் ஒரு வாக்கியத்துக்கு ஒரு விளக்கம் தர வேண்டும். நடசத்திரங்கள், கிரகங்கள் ஆகிவற்றின் சாரங்களின் இடைவெளியினை அளக்க அளவுகோல் போல் இருப்பதால் அவர்களின் மஸ்தகம் - தலையானவள் என்று பொருள்.

வேதவேதாந்த அறிவு நுட்பங்களுக்கும், மோட்சத்திற்கும், எந்த ஒரு பிரச்சனையிலிருந்தும், விமோசனம் பெறுவதற்கும் காரகத்துவம் உள்ளவன்.

பரந்த உலகத்தில் நாளுக்கு நாள் விரிவடைந்து கொண்டிருக்கும் விஞ்ஞான மெஞ்ஞானத் துறைகள் அனைத்தையும் தன் ஆதிக்கத்தின் கீழ் அடக்கி ஆளுகின்ற ஆற்றல் உடையவன் கேது.

சிவபக்தியில் பிரியமுடையோன். செல்வத்தின் நாலாவிதக் கூறுபாடுகளோடு தொடர்புடையவன்.

அதீதமான தவவேள்வியில் ஈடுபடுத்துவோன்.

எளிமை, கடுமை இரண்டுக்கும் உடையோன்.

மத்க் கோட்பாடுகளிலும், பக்தி நெறிகளிலும் சிந்தையைச் செலுத்த விடுவோன்.

உலக பந்தங்களிலிருந்து விடுவிப்போன், சுபீட்சம், சௌபாக்யம், சுகபோகம் அத்தனையையும் அளிப்போன்.

வியாதியிலிருந்து நிவாரணம் தருவான். பகைவரை முறியடிக்கச் செய்வான். தேர்ந்த மருத்துவர்களை உருவாக்குவான். பசியை உண்டுபண்ணுவான். உறவை ஊட்டுவான். கண் நோய்க்கும், புண்ணுக்கும் காரணமானவன். காய்ச்சல் ஏற்படுத்துவான். நாய், மான், கழுகு, சேவல், கொம்புள்ள பிராணிகள் ஆகியவற்றிற்குக் காரகத்துவம் உடையவன் ஆவான்.

சுப பலம் பெற்றிருந்தால் மேற்கூறப்பட்ட சிறப்பு அம்சங்களில் விசேடத்துவத்தை அளிக்க ஒரு நாளும் தவற மாட்டான்.

பலவீனம் உள்ள கேது உடல் வலிமையை உண்டுபண்ணுவதுடன், மனநோயையும் ஏற்படுத்துவான். விபத்துக்களையும் தகாத சகவாசத்தையும் ஏற்படுத்தித் தொல்லை கொடுப்பான்.

தாய் வழிப் பாட்டனுக்குக் காரகன் இவன்.

ஒருவருடைய ஜாதகத்தில் கேதுவின் பலம் நிறைந்திருக்குமானால், இகம், பரம் என்ற இரு உலகங்களிலும் சுகம் பெறச் செய்வான்.

அங்காரகனுக்கு உரிய பலன்கள் கேதுவுக்கும் பொருந்தும்.

செந்நிறத்தோன். கலப்பு நிறத்தோனும் கூட. ஆண், பெண், அலி என்ற பிரிவில் அலி ஆவான். தாமஸ குணத்தோன்.

பஞ்ச பூதங்களில் ஜலம் இவன். நீச பாஷைகளில் தேர்ச்சியளிப்போன். புளிப்புச் சுவைப் பிரியன். குரூர சுபாவத்தோன்.

விருச்சிகத்தில் உச்சமானவன், ரிஷபத்தில் நீசமானவன். மீனத்தைச் சொந்த வீடாகக் கொள்வோன்.

வைடூரியம் இவனது ரத்தினம்.

பாபக்கிரகங்களுள் ஒருவனாகக் கருதப்படும் இவன், பாப விமோசனத்தக்கும் அதிபதியாவான்.

புதன், சுக்ரன், சனி இவனுடைய நண்பர்கள், குரு, சூரியன், சந்திரன் பகைவர்கள்.

மோகினியால் துண்டிக்கப்பட்ட ராகுவின் உடம்புதான் கேது. மகா விஷ்ணுவை வேண்டித் தவம்புரிந்த கேதுவுக்கு, அவரது அருளால் பாம்புத் தலை அமைந்தது.

மகா கேது, ஸர்வ கேது என்றும் இவனுக்குப் பெயர்கள் உண்டு. கொடி போன்ற இருக்கையில் அமர்பவன் கேது என்று கூறப்பட்டிருக்கிறது.

தீட்சிதர், மஹாஸுரம் கேது மஹம் பஜாமி என்று தொடங்கும் கீர்த்தனையில், மிக்க கோபமுடையோன் என்றும், ஞானியருக்கு ஆபரணமாக இருப்பவன் என்றும் கூறுகிறார்.

பலதரப்பட்ட உலகினரோடு பழகும் வாய்ப்பைப் பெறவும், சுபீட்சங்கள் அனைத்தையும் பெற்று அனுபவித்துச் சகல பந்தங்களிலிருந்து விடுதலை பெறவும், அருள் பாலிக்கும் ஆற்றல் நிறைந்த ஞானகாகரன் கேதுவை நாளும் போற்றி வழிபடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகல செல்வங்களும் தரும்
# ஸ்ரீ மஹாலக்ஷ்மி



## ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் அம்சமாய் அவதரித்த ஸ்ரீ தேவி பூதேவியர்

ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு இரண்டு ரூபங்கள் உண்டு. ஒன்று ஸ்ரீதேவி என்ற லக்ஷ்மி, மற்றொன்று பூதேவி என்ற பூமிதேவி வடிவம். ஸ்தாவர ஜங்கமம் என்ற குறிப்பிடுவார்களே அதில் ஸ்தாவரம் என்பது "அசையாத சொத்துக்களாகும்" (Immovable Properties) இவையெல்லாமே "பூமாதேவியின்" வடிவம் தான். ஜங்கமம் என்பது "அசையும் சொத்துக்களாகும்" (Movable Properties) இவையெல்லாமே "ஸ்ரீ தேவியின்" அம்சம் தான். அதனால்தான் "பூதேவியை" அசலா என்றழைக்கிறார்கள். இதற்கு அசையாதவள் என்று பொருள் (அசையாத மலையை அதனாலதான் அசலம் என்று பெயரிட்டு அழைக்கிறார்கள் உதாரணம் திருவண்ணாமலை என்பது அருண + அசலம் = அருணாசலம்) அசைபவள் என்பதால் தான் "ஸ்ரீதேவியை" சஞ்சலா என்றழைக்கிறார்கள். இதற்கு ஓரிடத்தில் நில்லாமல் மாறிக் கொண்டேயிருப்பவள் என்று பொருள். ஆம்! செல்வத்தின் நிலையும் அதுதானே ஓரிடத்தில் நிலைத்து நிற்கிறதா? இடம் மாறிக் கொண்டே தானே இருக்கிறாள் "ஸ்ரீ லக்ஷ்மி".

### உலகியல் நோக்கில் ஸ்ரீ தேவி, பூதேவி

உலகில் பிறந்த உயிரினங்கள் அனைத்திற்கும் பூமியே ஒரு பெருஞ்செல்வம்தான். இவை பிறந்து, வளர்ந்து, உண்டு, உறங்கி, வாழ்ந்து, மடிவது இந்த பூமியின் மேல்தான். ஆகையால் பிராணிகளுக்கு இது ஒரே செல்வமாகிறது. ஆனால் மனிதர்களாகிய நமக்கு பூமியின் ஒரு செல்வமாகவும் அதில் கிடைக்கும் பலவகை வளங்கள் என்பது ஒரு செல்வமாகவும் பிரிக்கப்படுகிறது. இதுவே பூதேவி பூதேவியின் இருவேறு வடிவங்கள். பிராணிகள் வேலை செய்து, நிதி சேர்த்து, அதை செலவு செய்வதில்லை அல்லவா?

### மஹாலஷ்மியின் பல்வேறு பெயர்கள்

லக்ஷ்மிதேவி. வைகுண்டலத்தில் ரமாதேவி, சொர்க்கத்தில் சொர்க்க லக்ஷ்மி, பாதாள உலகில் நாகலக்ஷ்மி யாக இருக்கிறாள். அவள் ராஜாக்களிடம் ராஜ லக்ஷ்மியாகவும் விளங்குகிறாள். விலங்குகளிடத்தில் சோம லக்ஷ்மியாகவும், புண்ணியவான்களிடம் ப்ரீதிலக்ஷ்மியாகவும். வேதாந்திகளிடம் தயாலக்ஷ்மியாவும் இருக்கிறாள்.

திருமால் கோயில்களில் பகவத் சன்னதியில் உள்ள பகவானுடைய மார்பில் உள்ள லக்ஷ்மிக்கு போகலக்ஷ்மி என்றும், தனிச்சன்னதியில் அருள்புரிபவர்களுக்கு வீரலக்ஷ்மி என்றும் பெயர்.

ஸ்ரீ லக்ஷ்மி என்று போற்றப்படும் மகா லக்ஷ்மிக்கு பல பெயர்கள் உண்டு. மாதுளங்கனியிலிருந்து உதித்ததால் மாதுளங்கி என்றும், பத்மாஷனால் வளர்க்கப்பட்டதால் பத்மை என்றும்: அக்னி குண்டத்தில் வாசம் செய்ததால் அக்னிகர்ப்பை என்றும். ரத்தின வடிவம் எடுத்ததால் ரத்தினாவதி என்றும், ஜனக மகா ராஜனுக்கு மகளானதால் ஜானகி என்றும், பூமிக்குள்ளே கலப்பையின் நுனியிலிருந்து வெளியேற்றப்பட்டமையால் சீதை என்றும் பாற்கடலிலிருந்து தோன்றியதால் 'ஸ்ரீ' என்றும் அவள் போற்றப்படுகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தத்துவ நோக்கில் ஸ்ரீ தேவி, பூதேவி

படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களைத் தான் சமஸ்கிருதத்தில் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்கிறோம். (முறையே Generation, Organization, Destruction என்று ஆங்கிலத்தில் இவை கூறப்படும் இதுவே "காட்" (God) என்பதற்கான விளக்கம்) இந்த முத்தொழில்களுக்கான தெய்வங்களாக முறையே பிரும்மா, விஷ்ணு, ருத்திரன் என்ற மும்மூர்த்திகள் உள்ளனர். இவர்களுக்கான சக்திகளாக முறையே சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி என்ற தேவியர்கள் குறிப்பிடப்படுவர். இதில் விஷ்ணுவின் சக்தியாக லஷ்மியே அங்கம் வகிக்கிறாள். இங்கே பூமாதேவி தனியே காட்டப்படவில்லை என்பதை கூர்ந்து நோக்குங்கள்.

இந்த இடத்தில் ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் உள்ளே பூமாதேவி இருக்கிறாள். இப்படி ஸ்ரீ தேவி பூதேவி இருவரும் ஒரே வடிவில் மஹாலக்ஷ்மியாக இருந்தாலும், பின்பு காலக் கிரமத்தில் ஐஸ்வர்ய ரூபிணியான ஸ்ரீ மஹாலக்ஷ்மியை வேறுபாடற்ற அதே நிலையில் வைத்துக் கொண்டு, அதனுள்ளிருக்கும் பூமாதேவியை மட்டும் பிரித்து விஷ்ணுவின் மற்றொரு பத்தினியாகக் காட்டும் பழக்கம் உண்டானது. அதனால்தான் பாஞ்சராத்ர ஆகமத்தின்படி ஸ்ரீ மஹா விஷ்ணுவின் அர்ச்சா மூர்த்தங்களின் இருபுறமும் ஸ்ரீதேவி பூதேவியர்களை தனித்தனியாக வைத்து வழிபடும் பழக்கம் உருவானது என்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.



இப்படி ஸ்ரீதேவி பூதேவி இருவரும் ஒருவரே என்பதற்கான ஆதாரங்கள் குணரத்னகோசம், ஸ்ரீசூக்தம் (நஞ்ஜீயரின் பாஷ்யம்) போன்ற நூல்களிலும், வேதாந்தம் தேசிகர் அருளிய ஸ்ரீஸ்துதி, பூஸ்துதி போன்ற கிரந்தங்களிலும் காணக்கிடைக்கின்றன.

விஷ்ணுபத்னீம் மஹ்ம்தேவீட் மாதவீம் மாதவப்பிரியாம் என்றும் லஷ்மீ ப்ரிய சகிம் தேவீம் நாமாம் யச்சுத வல்லபாம் என்றும் ஹரீஸ்சதே லக்ஷ்மீஸ்ச பத்னியை என்றும் வேத நூல்களில் சில வாக்கியங்கள் காணக்கிடக்கின்றன. இது போல வரும் இடங்களில் எல்லாம் ஸ்ரீதேவி பூதேவி இருவரும் ஒருவரே. அது ஸ்ரீதேவி, பூதேவி இருசரும் சேர்ந்த ஸ்ரீ மஹாலக்ஷ்மியே என்று கற்பித்துக் கொள்ள வேண்டும் என்பது மஹான்களின் கருத்தாகும்.

எனவே பக்த கோடிகள் இதே பாவனையில் தனித்தனியே உள்ள ஸ்தலங்களில் தனித்தனியாகவும், இருவரும் ஒன்றாகவே உள்ள சில ஸ்தலங்களுக்குச் செல்லும் போது அங்கு ஸ்ரீதேவி பூதேவி இருவரும் ஒருவரே என்ற பாவனையோடும் வழிபட்டு ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் பேரருளைப் பெற்று உய்யலாம்.

தொடரும்

# 51 அக்ஷரங்களில்


## ஸ்ரீ மஹாலக்ஷ்மியும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவும்

*எண்ணென்ப ஏனை எழுத்தென்ப - இவ்விரண்டும்*
*கண்ணென்ப வாழும் உயிர்க்கு.*

என்பார் வள்ளுவப் பெருந்தகை. எண்ணும் எழுத்தும் கண்ணெனைத் தகும் என்பார்கள் பெரியோர்கள். அப்படியான எழுத்துக்களை அக்ஷரம் என்பார்கள். அக்ஷரம் என்றால் அழிவில்லாதது என்று பொருள். அதனால்தான் கல்விக்கு அழிவில்லாத்தன்மை உள்ளது. அதில்கூட மஹாலக்ஷ்மி உள்ளார் என்பதை இங்கே பார்க்கலாம். அகரம் உகரம் மகரம் என்ற மூன்றின் சேர்க்கையே ஓங்காரம் எனும் பிரணவம், இதில் அகரத்தின் தேவதை ஸ்ரீவிஷ்ணு, உகரத்தின் தேவதை ஸ்ரீதரன், மகரத்தின் தேவதை நாராயணன், அதனால் ஓங்காரம் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் ஆளுமைக்கு உட்படுகிறது. அது மட்டுமல்ல ஷ என்ற எழுத்துக்கு அதிபதி ஸ்ரீ மஹாலக்ஷ்மியே ஆவாள். இன்னும் பல எழுத்துக்களுக்கு மஹாவிஷ்ணுவின் பல்வேறு அம்சாவதாரங்கள் தேவதைகளாக உள்ளனர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லக்ஷ்மி குபேரர் பூஜை



"யாம் இருக்கும் இடத்தில் செல்வம் செழிக்கும்"

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம், ஐம் குபேர லக்ஷ்மியை
கமலதாரிண்யை தனாகர்ஷிண்யை ஸ்வாஹா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குபேரன் உருவம்

நல்ல சிவந்த மேனி, குள்ள உருவம் பெரிய வயிறு, சிரித்த முகம். குதிரையை வாகனமாகக் கொண்டவர். மற்றொரு சமயத்தில் தாமரை மலரின் மீது வலக் காலை மடக்கி வைத்துக்கொண்டு இடக்காலை தொங்கவிட்டுக் கொண்டு இடக்கையில் சங்க நிதி, வலக்கையில் பதும நிதி அடங்கிய கலசத்தை அணைத்துக் கொண்டு சிரித்த அழகான முகத்துடன் இருப்பவர். இது போகக் குபேரன் எந்த உருவத்தை விரும்புகிறாரோ அதுவாக மாறும் ஆற்றாலும் படைத்தவர். இவருக்கு சித்தரிணீ என்ற துணைவியாரும் உண்டு.

## குபேர யந்திரம் வழிபாடு

அதிர்ஷ்டம் தரும் குபேர யந்திரத்தை புரசு இலையில், தாமிரம் அல்லது வெள்ளி அல்லது தங்கத்திலான 3+3 அளவுள்ள தகடை ஒன்பது கட்டங்களாக்கி எப்படி கூட்டினாலும் 72 வருகிற மாதிரி எழுதி, தாமரை மலர் கொண்டு துடைத்து, பால், பன்னீரால் கழுவி, சிவப்பு நிற பட்டுத் துணியின் மீது வைத்து, ஐந்து முகம் கொண்ட குத்து விளக்கில் நெய் தீபம் ஏற்றி, குபேர படத்திற்கும் தாமரை மலரால் அர்ச்சித்து 72 நாட்கள் கீழே உள்ள மந்திரத்தை ஜபித்து வந்தால் பெரும் செல்வம் சேரும். பிரபுக்களும் செல்வந்தர்களும் தேடி வந்து உதவுவார்கள். இந்த யந்திர பூஜைக்கு கைமேல் பலன் உண்டு.

இந்த யந்திரத்தின் சிறப்பம்சம் இதில் குறிப்பிட்டுள்ள எண்களை எந்த முறையில் கூட்டினாலும் அது 72 ஆக வர வேண்டும். இந்த 72ன் கூட்டுத்தொகை ஒன்பதாக வரும்.

உதாரணம்: 27+20+25=72=9

25+24+23=72=9

23+28+21=72=9

| | | |
|---|---|---|
| 27 | 20 | 25 |
| 22 | 24 | 26 |
| 23 | 28 | 21 |

**மநுஜ வாஹ்ய விமாந வரஸ்திகம்.**

**கருடாத்த நிபம் நிதி தாயகம்!**

**ஸிவஸகம் முகடாதி விபூஷிதம்**

**வரகதம் தந்தம் பஜதுந்திலம்!**

## குபேர பூஜைக்குரிய பொருட்கள்

மஞ்சள் பொடி, தீர்த்தம், மேடை, ஸ்ரீதனாகர்ஷணா ஸ்ரீ லஷ்மி குபேர யந்த்ரம், பட்டு விரிப்பு, கலசம், மாவிலை, புஷ்பமாலை, அட்சதை, மஞ்சள் பொடி கலந்த அரிசி, வாழை இலை, சந்தனம், குங்குமம், தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, கற்பூரம், உதிரிப்பூ, குத்துவிளக்கு, நல்லெண்ணெய், நெய், திரி, தீப்பெட்டி, பால், தேன், தயிர், பஞ்சாமிர்தம், மணி, கிண்ணம், தீபத்தட்டு, தூபக்கால், ஆரத்தி, ஊதுபத்தி, சாம்பிராணி, உத்தரணி, பஞ்ச பாத்திரம், திருமாங்கல்யம், பூணூல், வஸ்திரங்கள், ஆபரணங்கள், பாயாஸம், அப்பம், வடை, காய்கறி, பிரசாதம் மற்றும் நவதானியங்கள் அதாவது கோதுமை, அரிசி, துவரை, பச்சைப்பயிறு, கொண்டைக்கடலை, மொச்சை, எள்ளு, உளுந்து, கொள்ளு இவைகளை வைக்கத் தனித்தனிக் கிண்ணம் முதலியன வேண்டும்.

## பூசை செய்யும் முறை:

ஐப்பசி மாதம் வரும் அமாவாசை பூஜைக்கு சிறந்தது. அம்பிகைக்கு உகந்த நாளான செவ்வாய், வெள்ளி, சுபநாளில், சுப நட்சத்திரத்தில் சுப திதியில், சுபயோக, சுபகரணத்தில் தனாகர்ஷண ஸ்ரீ லக்ஷ்மி குபேர யந்த்ரத்தை நல்லதொரு மேடையிட்டு, விரிப்புப் போட்டு, வாழை இலை மீது அட்சத்தை பரப்பி, அதில் கிழக்கு முகமாக யந்த்ரத்தை வைத்து சந்தனம், குங்குமம் இட்டு, புஷ்பமாலை சாற்றி அலங்கரித்து, கலசத்தில் நீர் நிரப்பி மாவிலை கொத்து வைத்து, மலர் சாற்றி, சந்தனமிட்டு, அட்சதை சேர்த்து, யந்த்ரத்தின் வலப் பக்கத்திலேயே வைக்க வேண்டும்.

தொடரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்கணித ஜோதிடம்

சென்ற மாத தொடர்...

பிறந்த திகதிப் பலன்களும் அதிஷ்ட ரகசியங்களும்
எண்ணும் ~ எழுத்தும்

| எண் | எண்ணுக்கு உரிய எழுத்து | எண்ணின் ஆதிக்க கிரகம் |
|---|---|---|
| 1. | A-I-J-Q-Y | சூரியன் |
| 2. | B-K-R | சந்திரன் |
| 3. | C-G-L-S | குரு |
| 4. | D-M-T | ராகு |
| 5. | E-H-N-X | புதன் |
| 6. | U-V-W | சுக்கிரன் |
| 7. | O-Z | கேது |
| 8. | F-P | சனி |
| 9. | | செவ்வாய் |

குறிப்பு:- இக்கலையில் 9 ஆம் எண்ணுக்கும் எழுத்துகளுக்கும் தொடர்பில்லை. அங்ஙனமே எண்களில் "0" க்கு தனித்தன்மை இல்லை. உதாரணமாக 10 என்கிறபோது 1ஆம் எண்ணின் இயக்க சக்தியும் 80 என்கிற போது 8 ஆம் எண்ணின் இயக்க சக்தியுமே பிரதிபலிக்கிறது என்பதே விதி.

## எண் 5. புதன்

புதனின் பாசத்திற்கு உள்ளான என் இனிய அன்பரே!

நீர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத உன்னத குணவானே. எதையும் எளிதில் புரிந்து விளக்கும் இயல்பாளர். உண்மையிலேயே நீர் சகலகலா வல்லுநரே. எதையும் சாதிப்பேன் எனும் உறுதியை உம்பால் காண்கிறேன். அழகோ அருவருப்போ எப்படியிருந்தாலும் பெண் என்றால் கொஞ்சம் பேதலித்து நிற்பீர். அது உம்மிடம் உள்ள ஒரு 'வீக்' பாயிண்டே. வயது வரம்பை தூக்கி எறிந்து காமக் களியாட்டங்களில் ஈடுபடவே செய்வீர். என்ன செய்வது? உள்ளத்தைச் சொல்ல வேண்டாமா? வீரம் மட்டென்றாலும் விவேகம் மிகுதி. பதுங்கியே எதிரியைப் பழிவாங்கும் பான்மையாளர் நீர். ஒரே கொள்கை உமக்கில்லையல்லவா? நாளுக்கொரு கட்சி வேளைக்கொரு கொள்கை என்றால் கோபிக்கமாட்டீர்: ஏனெனில் உண்மை அதுவே. சந்தர்ப்பவாதிகள் என உம்மை பழிப்போரும் சமுதாயத்தில் உண்டு. எனினும் உம்மை யாரும் பகைத்துக்கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் எவ்வளவு சிக்கலான பிரச்சனையையும் சீராக விடுவிக்கும் சிறப்பு உம்பால் இருக்கிறதே! எவரும் தன் சொல்லுக்குக் கட்டுப்பட வேண்டும் என்னும் எண்ணம் கொண்ட நீர் பெண்களை ஆட்டி வைப்பதில் அசகாய சூரர்.

உங்களில் பெரும்பாலானோர் குள்ளமான உருவமும் அதற்கேற்ற பருமனும் உடையவராய் காந்த சக்தியுடைய கண்களும் மேல்நோக்கிய நெற்றியும் சற்று சரிவான நாசியும் கொண்டு அபூர்வ அழகுடையவராய் இருப்பீர். கடின உடலுழைப்பை வெறுப்பவர் நீர். எளிய வழியில், ஒரு சில சமயங்களில் ஏமாற்று வழியில் இறங்குவீர். குதிரைப் பந்தயம், சூதாட்டம், கேளிக்கை போன்றவற்றில் உம்மை ஈடுபடுத்திக் கொள்வதில் உற்சாகம் காட்டுவீர்.

உங்கள் வேடிக்கை வினோதப் பேச்சால் எவரும் உமைப் புகழ்வர். குறிப்பாக அழகு மாதர் உமை எப்போதும் ஆராதிப்பர். கற்றவரும், மற்றவரும் பாராட்டுவர். கவிஞர்கள் போற்றவர்: கொடை வள்ளல் எனவும் பாராட்டுவர்.

உங்களில் பலர் வணிக விற்பன்னர்களாக இருக்கின்றீர். கமிஷன் ஏஜண்ட், புரோக்கர் போன்ற தொழிலில் புகழடைகின்றீர். எழுத்தாளர் - பதிப்பாளர்-விற்பனையாளர் என பொருள் ஈட்டுகின்றீர். அரசாங்கத் துறை, வங்கி, வணிக நிலையம் போன்றவற்றிலும் ஒரு சிலர் குமஸ்தாவாக தொழில் செய்கின்றீர்.

5, 14, 23 தேதிகளில் பிறந்து 5-ஐ உயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணாக உடையவர் 5ஆம் எண்ணிலேயே பெயர் வைத்துக்கொள்வது உத்தமம்.

அனுதினமும் திருமால் வழிபாட்டைச் செய்யவும்.

திருமணம் ஆகாதவர் 5 அல்லது 9ஆம் எண்ணுக் குரியவரை நாடி மணப்பது ஜாடிக்கேற்ற மூடி.

சாம்பல் வண்ண உடைகளை அணியுங்கள். பச்சையும், கருப்பும் பாதகத்தை உண்டு பண்ணுவதால் அவற்றை விலக்கலாம். ரத்தினவகையில் வைரமே வளத்தைத் தரும். எனவே வைரம் பொதிந்த ஆபரணம் அணியவும்.

5அல்லது 9க்கு உரியவரோடு நட்புக் கொள்ளுங்கள். வீடு, தொலைபேசி, வாகனம் போன்றவற்றிற்கு சாம்பல் வண்ணத்தைப் பூசுங்கள். அவற்றின் ஆதார எண் 5 அல்லது 9ஆக அமையப்பாருங்கள்.

ஒவ்வொரு மாதமும் 5, 9, 14, 18, 23, 27 அல்லது தேதி மாதம் ஆண்டைக் கூட்டி வரும் எண் அல்லது 9 அமையும் புதன், செவ்வாய் போன்ற தினங்கள் அதிர்ஷ்டத்தைத் தரும் என அறிந்து செயல்படுங்கள்.

வடக்கு முகவாயில் உள்ள வீட்டில் வசியுங்கள். வணிக ஸ்தலம், தொழிலகம் போன்ற இடத்தில் வடக்கு நோக்கி அமருங்கள்.

நரம்புத் தளர்ச்சி, சித்தப் பிரம்மை, காக்காய் வலிப்பு, சருமத்தில் அரிப்பு, தடிப்பு போன்ற நோய்கள் ஏற்படலாம்.

வாழ்வெண்ணும் 5 ஆக வர பெயர் எண்ணை அமைத்துக்கொள்ள முடிந்தால் நல்லது.

**அடுத்த இதழில் எண் 6**


தொடரும்

# பெருமாள்



ஆசைத் தீயை குறைத்து
ஆணவம் மாயை
அனைத்தும் அழித்து
நீயே கதியென்று
நிர்மூலம் ஆனபின்பு
பாப இருளை நீக்கி
பண்பட அருளை காட்டி
வினையெனும் நோயை ஓட்டி
விதியெனும் செயலை மாற்றி
அற்புதம் செய்வான் ஒருநாள்
அவனே அனைத்துமாய்
நிறைந்த பெருமாள்

அரங்கா! அரங்கா! என்றழைத்து
ஆனந்தத்தால் மெய்சிலிர்த்து
இனிய தமிழாம் மொழியதிலே
ஈடில்லாத பிரபந்த மென்னும்
உலகில் பக்தி உணர்வதனை
ஊட்டும் அற்புத இலக்கியத்தை
எங்கும் எதிலும் நிறைந்திட்ட
ஏற்றம் மிக்க பரம்பொருளாம்
ஐயன் அரங்கன் அவனடியை
ஒருமுறை மனதால் தியானித்து
ஓதியுணர்ந்து தெளிந்திட்டால்
ஔடதம் ஆகுமே வாழ்விற்கே



ஓங்கி உலகளந்த பெருமை
ஒன்றே போதும் உனை வணங்க
தாங்கும் பொறுமை புவியின்
துன்பங்கள் யாவும் அகல
பொங்கி வரும் இன்பமே
வழங்கி உலகைக் காக்கும்
ஒன்றே பரம்பொருளே
நன்றே நல்கும் பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


VISGHA
TRADE CENTER
IMPORT AND DEALERS IN CHINESE KUBERAN, GIFT ITEMS
STONE STATUES, TEMPLE GOODS, WEDDING GIFTS,
PHOTO FRAMES, LAMPS & ALL KIND OF
BRASS ITEMS
இந்திய சுவாமிப் படங்கள்
மாலைகள்
மின்சார மங்கள வாத்தியங்கள் (9", 12", 15")
கும்பக் குடைகள் 8/10/12 பிரம்பு
இந்திய கருங்கற் சிற்பச்சிலைகள்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இந்திய கருங்கற் சிறப்புச்சிலைகள்
- கும்பகோண பித்தளை விளக்குகள்
- நிறைகுட செட்
- மங்கள வைபவத்திற்கான தாம்பூல பரிசுப்பொருட்கள்
- குபேரன் சிலைகள்
- பித்தளை கை மணிகள், தேர் மணிகள்
- ஆலய வெண்கல மணிகள்
- யாகசாலை தேர் அலங்கார பொருட்கள்
- **Black Metal** சிலைகள்
- ஐம்பொன் சிலைகள், பித்தளை சிலைகள்

போன்றவைகளை இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

அனைத்து வகையான பித்தளை சிலைகளும்
மெருகூட்டி தரப்படும்.



## Visgha Trade Center

No. 145-P5, Andival Street, Colombo-13, Tel:011 489 4799

Fax: 011 244 7683, E-mail: visgha@hotmail.com www.visgha.lk

TEL: Hari - 077 243 5899 :hari visgha


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PRASANNA




## MONEY EXCHANGE (PVT)LTD

MONEYCHANGER PERMIT NO. IN/AUT/MC/58 A

No.57, Galle Road, Colombo 06. Tel : 2 591420 2 591 421


Fax : 2 504108 Email : prasannaexchange@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. எறும்புகளின் கோர தவம் ஆரம்பமானது.





7. கைலாயத்தில் பார்வதி தேவி இதைக் கண்டு திடுக்கிட்டாள்.



8. தவத்திற்கு மெச்சி எந்த வரத்தையும் சிவபெருமான் கொடுத்து விடுவார் என்பது அவளுக்குத் தெரியும்.



9. எறும்புகள் தவம் பலித்து, அவை கடித்து மனித இனம் மடிய ஆரம்பித்தால் உலகம் என்னவாகும் என்று பார்வதி தேவி கலங்கினாள்.



10. எறும்புகளின் தவத்தைத் தடுக்க வழிசெய்யுமாறு சிவனை வேண்டினாள்.



11. எறும்பின் தவத்தைத் தடுக்க வேண்டாம். அவை செய்யும் தவறைத் தடுத்தால் போதும் என்றார் சிவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்முகக் கடவுள்

தஷிணாமூர்த்தியை எண் வகை வடிவங்களில், அடியவர்கள் வழிபடுகின்றார்கள். அவை கீழ் வருமாறு.

1. யோக தக்ஷிணாமூர்த்தி
2. வீணாதர தக்ஷிணாமூர்த்தி
3. ஞான தக்ஷிணாமூர்த்தி
4. வர தக்ஷிணாமூர்த்தி
5. மேதா தக்ஷிணாமூர்த்தி
6. ஆஸீந தக்ஷிணாமூர்த்தி
7. யோக பட்டாபிராம தக்ஷிணாமூர்த்தி
8. சக்தி தக்ஷிணாமூர்த்தி

## 1. யோக தக்ஷிணாமூர்த்தி

வேதாகமங்களின் நுட்பங்களை இவர் சநகர், சநந்தனர், சநாதனர், சநற்குமாரர் ஆகிய நான்கு முனிவர்கட்கு விளக்கியும் அவர்களுக்கு விளங்காமையால், யோகத்தால் ஞானம் பெற்று நிட்டையும் கைகூடும் நிலையை விளக்கித் தாமே யோகநிலையில் அமர்ந்து சின் முத்திரை காட்டி மௌனத்தாலே விளக்கி அருளிய நிலையே யோக தஷிணாமூர்த்தியாகும்.

## 2. வீணாதர தக்ஷிணாமூர்த்தி

பிரளயத்தில் புவனம் மூழ்கும்போது எல்லாம் ஒடுங்கிவிடும். சிவபெருமான் மட்டுமே தனித்திருப்பார். அப்பொழுது தமது திருக்கரத்தில் உள்ள வீணையை மீட்டி தும்புரு, நாரதர், சுகர் முதலானோருக்கு வீணையின் இலக்கணத்தையும், அதன் நுட்பங்களையும் உணர்த்தியதனால் இவர் வீணா தக்ஷிணாமூர்த்தி என்றழைக்கப்பட்டார்.

## 3. ஞான தக்ஷிணாமூர்த்தி

சிவபெருமானின் ஆனந்த நிலையே நடராஜர் வடிவமாகும். அவரின் ஞான நிலை வடிவமே தக்ஷிணாமூர்த்தியாகும். வழிபடும் அடியவர்களின் இருள் அகற்றி ஞானவருள் புரிகின்றமையால் இவர் ஞான தக்ஷிணாமூர்த்தி என்றழைக்கப்படுகின்றார்.

## 4. வர தக்ஷிணாமூர்த்தி

சநகாதியர் நால்வருக்கும் வேதாகமங்களின் பொருள் விளங்கவில்லை: தெளிவின்றி மயங்கினர். இறைவன் வேதாகமங்களின் நுட்பங்களை அவர்கட்கு வியாக்யானம் செய்து உபதேசித்தருளினார். இதனால் இவர் வர (வியாக்யான) தக்ஷிணாமூர்த்தி என்றானார்.

மாணிக்கவாசக சுவாமிகள் இதனை,

**நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை**
**அன்றாலின் கீழிருந்து அறமுறைத்தான் காணேடி**

என்று பாடுகின்றார்.


திருஞானசம்பந்த சுவாமிகள்.

**ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங்கு**
**ஈரிருவர்க் கிரங்கிநின்று**
**நேரியனான் மறைப் பொருளை உரைத்து**
**ஒளிசேர் நெறியளித்தோன்**

என்று சிறப்பித்துப் பாடுகின்றார்.

## 5. மேதா தக்ஷிணாமூர்த்தி

இவர் மேதா விலாசத்தின் அடையாளம். அஞ்ஞானத்தை அகற்றி மெய்ஞானமாம் சிவாகமப் பொருளை விளக்கும் பொருட்டு கல்லால மரத்தின் அடியில் எழுந்தருளியிருப்பவர். பிரசன்ன வதனம், ஸ்படிக நிறம் கொண்ட திருமேனி கொண்டவர். ஞானமுத்திரை, நூல், அக்கினி, நாகம் முதலியவற்றைக் கொண்ட திருக்கரங்களுடன் முத்துமாலை, கிரீடம் அணிந்த எழில் தோற்றத்தில் காட்சியளிப்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. ஆஸீந தக்ஷிணாமூர்த்தி

இவர் வீர தக்ஷிணாமூர்த்தி என்றழைக்கப்படுபவர். வீரத்தின் அடையாளமாக இவர் தம் வலது திருக்கரங்களில் உளி, பாணம் கொண்டும், இடது திருக்கரங்களில் மான், வில் கொண்டும் வியாக்யான பீடத்தில் அமர்ந்துள்ளார். புலித்தோல் ஆடையால் அலங்கரித்து, ஜடாமகுடம், பாம்பு, பூணூல் அணிந்துள்ளவராய் இவர் விளங்குகின்றார். இவர் ஞானத்தின் மூலம் அஞ்ஞானத்தைக் களையவும், தீமைகளை அழிக்கவும், ஆணவத்தை அகற்றவும் வீரக் கோலம் கொண்டுள்ளார். முக்கண் மூர்த்தியாக, இவர் காணப்படுகிறார்.

ஆஸீந தட்சிணாமூர்த்தி என்றால் அமர்ந்த கோலத்தில் உள்ள தட்சிணாமூர்த்தி என்றும் பொருள். ஆஷீந தக்ஷிணாமூர்த்தி என்றால் கேட்டதைக் கொடுக்கும் தக்ஷிணாமூர்த்தி என்றும் ஒரு பொருள் உண்டு.

## 7. யோக பட்ட அபிராம தக்ஷிணாமூர்த்தி

தவநிலைப்பட்ட இவர் சர்வத்தையும் தன்னகத்தே ஒடுக்கிக் கொண்டு, பொங்கும் அழகுடன் அமர்ந்துள்ளார்.

ஒரு முகம், முக்கண், ஜடாமுடி கொண்டு வீணை வாத்தியத்துடன், வியாக்யான பீடத்தில் எழுந்தருளியுள்ளார். பாம்பினைப் பூணூலாகக் கொண்டுள்ளார். பிரசன்ன முகத்துடன் விளங்கும் யோக பட்ட அபிராம தக்ஷிணாமூர்த்தியை முனிவர்கள் சேவிக்கின்றனர்.

யோகம் என்பது தவம் புரியும் பெருநிலை. அபிராமம் என்றால் அழகு பொருந்திய அமர்ந்த நிலையில் சர்வத்தையும் தன்னகத்தே ஒடுக்கிக் கொண்டுள்ள நிலை.

## 8. சக்தி தக்ஷிணாமூர்த்தி

அனைத்து ஆற்றலையும் தன்னகத்தே கொண்டுள்ள பேராற்றலின் திருவாய் விளங்கும் இவர் ஸ்படிகம் போலும் வெள்ளை நிறம் கொண்டவர். முத்துக்களால் ஆன அக்குமாலை அணிந்து, அமிர்த கலசம் கொண்டு, ஞானமுத்திரை காட்டி, பாம்புடன் கூடிய கைகளைக் கொண்டுள்ளார். சந்திரனைச் சூடியுள்ள இவர் பூணூல் தாரியாகக் காட்சியளிக்கின்றார்.

ஞானசக்தியின் இருப்பிடமான இவர் உயிர்களின் உயிராய் இருந்து உதவி, அவற்றை இயக்கும் சக்தியாய் விளங்குகின்றார்.

தென்திசை காலனின் திசையாகும். தென்திசை நோக்கிச் செல்லல் இறுதி (மரண) யாத்திரையாகும். வடக்கு நோக்கிச் செல்லல் சரணயாத்திரை யாகும். வடக்கிருந்து உயிர்விடுதல் எண்ணற்பாலது. பீஷ்மர் சூரியனின் தேர்க்கால் வடபுறம் திரும்பிய பின் (உத்தராயண புண்ணிய சுபகாலத்தில்) உயிர்விட விரும்பியதும் இங்கு கருத்தில் கொள்ளலாம். தென்திசையில் உள்ள ஆன்மாக்களை வடக்கு நோக்கித் தன்பால் அழைத்து முத்தி தரும் நிலையே தஷிணாமூர்த்தியின் குரு வடிவமாகும். இதனை உணராமல் ஆணவமலப்பற்று கொண்டு திரிவோரை "தெற்கு வடக்கு புரியாமல் தடுமாறுகிறான்" என்று சொல்லும் சொல் வழக்கு ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

இத்தென்முகக் கடவுளை வழிபடுவோர்கள் பிறவாநிலை எய்துவார்கள்.

தொடரும்

## காளை



சிவன்கோயில்களில் முன்பாகத்தில் காளை இருப்பதைக் காணலாம். இது பரமசிவனுடைய வாகனம் காளை ஆனதால் அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது என்றே பலரும் நினைத்துள்ளனர். அதுவும் சரிதான். ஆனால் தருமத்தின் பிரதி உருவமாகவே காளை பூஜிக்கப்படுகிறது. நமது புராண இதிகாசங்களை ஆராய்ந்து பார்த்தால் தருமத்தின் குறிப்பீடாக விளங்குவதைக் காணலாம். காளையை பரமசிவன் தன் வாகனமாக்கியதும் இதனாலாயிருக்கலாம். தருமம் என்பதன் பொருள் நிலையானது என்பதாகும். அதாவது நூற்றாண்டுகளாக வேளாண்மை நிலை நின்றது காளையின் தருமத்தில் என்பது உட்கருத்து. காளையை வளர்த்து பராமரித்து வணங்கி நன்மையுள்ளவர்களாக மாறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பிரார்த்தனை எப்படிச் செய்வது?


எந்த வேளையும் இறைவனை நினைக்கவேண்டும். அது ஆரம்பத்தில் முடியா விட்டால் மூன்று வேளைகளில் தவறாமல் நினைக்கவும்.

காலை எழுந்தவுடன், “இறைவனே, இன்று நான் நல்வழியில் நிற்க அருள்புரி” என்று தொழவும்.

உணவு உட்கொள்ளும் பொழுது, “இறைவனே, இந்த உணவினால் எனக்கு நல்ல அறிவும் அன்பும் உண்டாக அருள்புரி” என்று தொழவும்.

இரவில் படுக்கும்போது, “இறைவனே, இந்த உறக்கத்திலே, உன் எண்ணமே நிற்க அருள்புரி” என்று தொழவும்.

-வாரியார்



# மனம் வெளுக்க மார்க்கமுண்டு

ஒவ்வொரு மனிதருக்கும் மனத்திற்கும் ஆக்க சக்தி உண்டு. அதேபோல் அழிக்கும் சக்தியும் அதனிடம் இருக்கிறது. மனம் தனது கட்டளைப்படி அறிவுக்குக் கட்டுப் பட்டதாக வைத்திருந்தால் உலகில் நீங்கள் எதையும் சாதிக்கலாம்.

மனத்தைப் பயன்படுத்துவதற்குரிய சரியான நேரம் அதிகாலைதான். அதிகாலையில் தோன்றும் எண்ணங்கள் தாம் அன்றைக்கு வேலைக்கு வித்துகள் போன்றவை. ஆகவே மனத்திலுள்ள பலவீனங்களை அகற்றிச் சுத்தம் செய்வதற்கும் நல்ல பழக்கங்களைப் புகுத்துவதற்கும் காலை நேரம்தான் சிறந்தது.

நல்லெண்ணங்கள் மனிதனைச் சிறந்தவனாக்கி ஆரோக்கிய வாழ்வைத் தருகின்றன. நோய் அவனை அணுகுவதில்லை. பிறர் வணங்கும் தன்மையையும் அவன் அடைகிறான். தனது எண்ணங்களால் தன் புலன்களை அடக்குபவன் தெய்வம் போன்றவனாகின்றான். அதனால் உங்களின் எண்ணங்கள் நல்லவையாக இருக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூரிய வழிபாடு

சீலமாய் வாழ சீர் அருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுதந்திரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய் -சூரிய துதி

**சூரியனுக்கு ஹோமம், யாகம் செய்யும்போது சொல்லப் படும் யாக மூலமந்த்ரம், சங்கல்பம்:**

பிராங்முகீம்: பத்மாஸநஸ்தம்: த்விபுஜம்: ஸப்தாஸ்வம்: ஸத்பரஜ்ஜம்: கலிங்க தேசாதிபதியும்: காச்யப கோத்திரம், ப்ரபவ ஸம்வத்ஸரமகா சுத்த ஸப்தம்யாம்: விசாகா நட்சத்திர ஜாதம்: ஸிம்ஹ ராஜ்யாதிபதிம்: பானுவார ப்ரயுக்தம்: க்ரீடினம், ஸுகாஸநம், பத்நீபுத்ர பரிவார ஸமேதம் க்ரஹ மண்டலே: ப்ரவிஸ்டம் அஸ்மிந் அதிகரனே: மத்யே வர்த்துலாகார மண்டலே: கோதும தாந்யஸ் யோபரி சூர்யக்ரஹம் ஆவாஹ யாமி.

சூரியக்ரஹ அதிதேவதாம்: அக்நிம்: ஸாங்கம் ஸாயுதம் ஸவாஹனம் சக்தீ பத்நி பரிவார ஸமேதம்: சூர்யக்ரஹ ப்ரதி அதிதேவதாம் ருத்ரம்: ஸாங்கம்: ஸாயுதம் ஸ்வாஹனம் சக்தி பத்நி புத்ர பர்வார ஸமேதம்: சூர்ய க்ரஹஸ்ய உத்தரத ருத்ரம் ஆவாஹயாமி.

குறிப்பு:

சூரியபகவானின் ஹோம, யாக வழிபாட்டில் மேற்கண்ட மூலமந்த்ர, சங்கல்பங்களை பயன்படுத்திக் கொள்ளலாம்!

## சூரியனின் அஷ்டோத்ர சதநாமாவளி

சூரியபகவானின் அஷ்டோத்ர சதநாமாவளியை சொல்லி அவரை, அபிஷேக ஆராதனையின்போது அர்ச்சனை செய்வதால், மிகவும் ப்ரீதி அடைந்து பூரண அருளாசி புரிவார்!

விண்ணில் சூரியபகவானை பார்த்தும் இந்த அஷ்டோத்ர நாமாவளியை பாராயணம் செய்ய சூரிய பகவானின் அருளாசி ஆற்றல் கிட்டும்!

ஒவ்வொரு நாமத்திலும் சூரியனின் ஆற்றல் பொதிக்கப் பெற்றுள்ளன. எனவே, அஷ்டோத்ரசத நாமாவளியைப் பாராயணம் ஒருமுறை செய்தாலே போதும். அளவிடற்கரிய சூரிய ஆற்றல் நம்முள் உருவாகுவதை உணர முடியும்.

சூரியனின் அபிஷேக, ஆராதனைகள், அர்ச்சனைகள், ஜப, ஹோம, யாகாதிகள் செய்யும்போது சூரிய அஷ்டோத்ரத்தை ஓதினால் சூரியனின் தரிசனம் கிட்டும். இது சூரியகலையில் பலன் உறுதி இங்கு பக்தி, சிரத்தை, பூரண நம்பிக்கைதான் மிக முக்கியம் ஆகும்!

சூரியனின் இராசி, லக்னமாகிய சிம்மத்தில் பிறந்தவர்களும் அவரின் தாரைகளான கார்த்திகை, உத்திரம், உத்திராடம்



ஆகியவற்றில் பிறந்தவர்களும், சூரிய திசை நடப்பில் இருப்பவர்களும் சூரிய அஷ்டோத்ரம் சொல்லி வந்தால் சகல சுபங்களும் சூரியனின் அருள் ஆசியால் கிட்டும்!!

தொடரும்

## கண் கண்ட தெய்வம்



தாயும் தந்தையும் கண் கண்ட தெய்வங்கள் என்பதை உணர்ந்து இல்லறத்தார் எப்போதும் எல்லா வழிகளிலும் அவர்களை மகிழ்ச்சியுறச் செய்ய வேண்டும். தாயும் தந்தையும் மகிழ்ச்சி அடைந்தால் இறைவனும் மகிழ்ச்சி அடைகிறார்.

சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ண அவதாரத்தில்..

கிருஷ்ணாவதாரத்தில் கண்ணன் பல முறை போர்க் கோலம் பூண்ட சம்பவங்கள் உண்டு. அவற்றில் முக்கியமான சம்பவம் ஒன்று சிவபெருமானையே எதிர்த்துக் கண்ணன் போர் புரிந்த வரலாறு.

கண்ணன் வாழ்ந்த காலத்தில் பாணாசுரன் என்ற ஓர் அசுரனும் வாழ்ந்து வந்தான். அவன் பிரஹலாதன் வழி வந்த பலியின் மூத்த புதல்வன். பாணாசுரபட்டிணத்தைத் தலைநகராக்கி பல அரசர்களை வென்று ஆட்சி புரிந்து வந்தான். அவன் பரம சிவபக்தன். சிவபெருமானைக் குறித்து கடுந்தவம் புரிந்து விசித்திரமான ஒரு வரத்தைப் பெற்றான் பாணாசுரன். தனது நகரத்துக்குக் காவல் தெய்வமாக இருந்து சிவபெருமான், கணபதி முருகன் மற்றும் பூதகணிகளோடு தன்னுயிரைக் காத்து வர வேண்டும் என்பதே அந்த வரம். அதன்படி பாணசுரனுக்குத் அவன் நாட்டுக்கும் எந்த ஆபத்தும் வராமல் சிவபெருமான் அனுக்ரஹித்து வந்தார்.

பாணாசுரனுக்கு உஷை என்ற மகள் இருந்தாள். அழகிலும், புத்தி கூர்மையிலும் அவளுக்கு நிகர் யாருமே இல்லாமல் இருந்தனர். ஒருநாள் அவள் கனவில் ஒரு சுந்தர புருஷன் தோன்றி அவளை நேசிப்பதாகக் கூறினான். அவளும் அவன் அழகிலும் அறிவாற்றலிலும் மயங்கினாள். தன் தோழிகளைக் கொண்டு எல்லா தேசத்து அரசகுமாரர்களின் சித்திரங்களையும் வரவழைத்துப் பார்த்தாள்.

துவாரகையில் ஸ்ரீ கிருஷ்ணனின் பேரன் அனிருத்திரன் தான், தன் கனவில் கண்ட ராஜகுமாரன் என்பதை உஷை தெரிந்து கொண்டாள். ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் ருக்மணிக்கும் ஒரு புதல்வன்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இருந்தான். அவன் பெயர் பிரத்யும்னன். அவன் மகன் தான் அனிருத்திரன்.

தான் கனவில் கண்ட ராஜகுமாரனை உடனே காணத் துடித்தாள் உஷை. அவளது தோழி சித்ரலேகா தன் மாயாஜாலத்தால் துவாரகையிலிருந்து அனிருத்திரனைக் கட்டிலோடு தூக்கி எடுத்து வந்து உஷையின் அந்தப்புரத்தில் சேர்த்தாள்.

அனிருத்திரனும் உஷையைக் கண்டதும் அவள் மேல் பாசமும் நேசமும் கொண்டான். இருவரும் காந்தர்வ விவாகம் செய்து கொண்டு உஷையின் அந்தப்புரத்திலேயே ரகசியமாக வாழ்ந்தனர். உஷை கர்ப்பமுற்றாள் அப்போதுதான் பாணாசுரனுக்குச் செய்தி எட்டியது.

தன் மகளை வசியம் செய்து தன் அனுமதியின்றி அந்தப்புரத்தில் நுழைந்து உஷைக்கு கணவனான குற்றத்திற்காக அனிருத்திரனைச் சிறையிலடைத்தான் பாணாசுரன்.

பல நாட்களாகியும் அனிருத்திரனைக் காணாத கிருஷ்ணன் ஒற்றர்கள் மூலம் அவன் பாணாசுரனால் சிறை வைக்கப்பட்டதை அறிந்தான். கிருஷ்ணனும் பலராமனும் யாதவ சேனைகளுடன் பாணாசுரப்பட்டினத்தைத் தாக்கினர். அங்கே காவல் தெய்வமாக நின்ற சிவபெருமான் தான் பாணாசுரனுக்குக் கொடுத்த வரத்தின்படி கண்ணனை எதிர்த்து போர் புரிய ஆரம்பித்தார். கணபதியும் கந்தனும் சிவனுடன் நின்று கண்ணனை எதிர்த்துப் போரிட்டனர்.

முடிவில் கண்ணன் மோகனாஸ்திரத்தைப் பிரயோகிக்கவே சிவபெருமானும் கணபதியும் முருகனும் அதனைத் தடுக்க தவநிலை மேற்கொண்டபோது கண்ணன் சக்ராயுதத்தை ஏவ அது பாணாசுரனைத் துரத்தி அவன் இவனது காலடிகளில் விழுந்தான். உஷையும் அனிருத்திரனும் ரதி மன்மதனின் அம்ஸமென்றும் அவர்களைச் சேர்த்து வைப்பது பாணாசுரன் கடமை என்றும் சிவபெருமான் எடுத்துரைத்தார்.

வரங்கள் பெற்ற காரணத்தால் மட்டுமே ஒருவன் எப்போதும் எல்லோரையும் வென்று கொண்டிருக்க முடியாது. வல்லவனுக்கு வல்லவன் வையத்தில் உண்டு என்பதை பாணாசுரன் உணர்ந்து பகவான் ஸ்ரீ கிருஷ்ணனிடம் மன்னிப்பு கோரி அதற்கு பிராயச்சித்தமாக தன் மகள் உஷையை அனிருத்திரனுக்குக் கன்னிகாதானம் செய்து வைத்தான். பின்னால் பாரத யுத்தத்தில் அர்ஜ்ஜுனனுக்காகத் தேரோட்டும் வேளையில் தனக்குத் தேவையான அத்தனை ருத்ரசக்திகளையும் இந்தப்போரின் போது சிவபெருமான் கண்ணனுக்கு அனுக்ரஹித்தார்.

கிருஷ்ணாவதாரத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் தவறாது லிங்க பூஜை செய்ததும், சிவ வழிபாடு புரிந்ததும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருமுருக தத்துவம்



## முருகனின் அருள் தோற்றங்கள்

திருமுருகன் தமிழ் மக்களின் பெருமைக்கும், மரியாதைக்கும், பக்திக்கும் உரிய தெய்வமாகும். முருகன் ஒருவனே என்றும் பலவேறு உருவத் தோற்றத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிக் கின்றான் என்பது மரபுவழி வரும் நம்பிக்கை. முருகனின் ஒவ்வொரு தோற்றத்துக்கும் இறைமை வழிப்பட்ட அர்த்தம் உண்டு.

## தேவசேனாபதி

இந்த உருவத் தோற்றத்தில் முருகன் ஆறு முகங்களையும், பன்னிரண்டு கரங்களையும் கொண்டு தெய்வாளை அம்மை சகிதம் காட்சி தருகிறான். ஒரு கையால் அம்மையை அரவணைத்த வண்ணம் மறுகையால் பக்தர்களுக்கு அபயமளிக்க தேவசேனாபதி அமர்ந்திருப்பார். பத்துக் கரங்களிலும் வில், வாள், வேல், தண்டு, வச்சிரம், சூலம், அரிவாள், அம்பு, புள்ளம், கேடயம் ஆகிய ஆயுதங்கள் காட்சி தரும்.

## ஆறுமுகவர்

ஞானம், ஐசுவரியம், திரு, வீரியம், வைராக்கியம், புகழ் என்ற இறைமைக் குணங்கள் ஆறும், ஆறுமுகங்களாகத் திகழ்கின்றன என்பர். ஆறு கரங்களிலும் ஆறு படைக்கருவிகள் இருக்கும் வள்ளி, தெய்வானை சமேதராக இருப்பார். மயில் மீது அமர்ந்தோ அல்லது மயில் அருகிலிருக்கவே காட்சி தருவார்.

## ஞான சக்திதரன்

முருகன் கைவேல் ஞானத்தின் சின்னம் என்பது இரண்டு கரங்களுடனும், ஒரு கையில் வேல் ஏந்தியும், மறு கையை தொடை மீது வைத்த நிலையிலும் காட்சி தருவான் திருத்தணிகை ஆலயத்தில் காணப்படும் முருகனின் திரு உருவம் ஞான சக்திதரன் தோற்றமே.

## கந்தசாமி

'கந்தன்' என்றால் திரண்டவன் என்று பொருள் படும். தெய்வங்கள் பலவற்றில் ஆற்றலும் ஒருங்கு திரண்டவன் என்ற கருத்தில் கந்தன் என்று கூறப்படுகின்றான் என்பர். 'கந்து' என்றால் கோல் அல்லது தண்டாயுதத்தையும் குறிக்கும். கோலேந்தி உருவமே கந்தபிரான் திருவுருவம் என்பர்.

## சுப்பிரமணியர்

இடப் பக்கத்துக் கரத்தினை இடுப்பிலே வைத்து வலப்புறக் கையை அபயமளிக்கும் நிலையில் வைத்து அளிக்கும் தோற்றமே சுப்பிரமணியன் ஆகும். பிரம்மண்யன் என்றால் பிரம்ம தேஜசும் ஞானமும் மிக்கவன் என்று பொருள், சுப்ரம்மண்யன் என்றால் பிரம்மத்தினும் உயர்ந்தவன் என்பதாகும். சுப்பிரமணியம் என்றால் வேதத்திற்கும் முந்தியவன் என்று பொருள்.

## யானை வாகனன்

முருகப் பெருமானின் வாகனம் மயில் என்றாலும் யானையையும் வாகனமாகக் கொண்டு சில இடங்களில் பக்தர்களுக்கு முருகன் காட்சி தருகின்றான். திருமுருகாற்றுப்படையில் முருகனின் யானை மீது ஒரு திருமுகமும் நான்கு கைகளும் விளங்க, இடது பக்கக் கரங்களில் சேவற்கொடியும், வலது கைகளில் வேலும் வாளும் கொண்டு காட்சி தருவான் முருகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ ராம ஜெயம்

# ஆஞ்சநேயப் பெருமானின் சிறப்புக்கள்

கடலினும் பெரிது கற்றவர். அவர்தம் ஆற்றலோ அளப்பரியது. அன்பால் அனைவரையும் ஆட்கொண்டவர். பண்பிலும் தனிமையானவர். தாயினும் சாலப் பரிவுடையவர். அனைத்தும் இணையப் பெற்ற ஆழ்கடல்.

ஆஞ்சநேய பக்தர் ஆண்டவரிடம் செலுத்தும் இடையறாத தூய அன்பு, எல்லாவகை ஆற்றல்களையும் கொடுக்கும். பிறர் நலம் பேணிப் பிறர் பொருட்டு வாழ்பவர்கள், உலகத்தவரால் போற்றப் படுவார்கள். அவர்கள் நீண்ட காலம் வாழ்வார்கள்.

ஆஞ்சநேயருக்குக் காரணப் பெயர்கள் உண்டு. அஞ்சனை மகன் ஆதலினால் ஆஞ்சநேயர். மாருதத்தின் சேய் ஆதலினால் மாருதி. வாயுவின் புத்திரன் ஆதலினால் சமீரணன் மகன் என்று கூறப்படுவதுண்டு.

காலின் மதலை, வாயு புத்திரன், கேசரி புத்திரன், இராம தூதன், காலின் மைந்தன், அஞ்சனை சிங்கம், குரவரச்சீயம், இராகவன் தூதன், அஞ்சனை சிறுவன், நம்பன் என்ற சிறப்புப் பெயர்கள் ஆஞ்சநேயருக்கு உண்டு.

## ஸ்ரீ ராம ஜெயம் - நாமத்தின் பெருமை

இலங்கையைக் கடப்பதற்கு அனுமார் கடலில் ஓர் அணை கட்ட நேர்ந்தது. பாறைக் கற்களை எடுத்து அதில் இராம நாமத்தை எழுதிக் கடலில் எறிய அது மிதந்தது. அதைக்கண்ட இராம பிரான் ஒரு பாறைக் கல்லை எடுத்து எறிந்தார். அது கடலில் அழிந்து விட்டது. அப்போது இராம பிரான் அனுமனை நோக்கிக் காரணத்தைக் கூறும்படி வேண்ட, இராம பிரானை விட இராம நாமம் வலிமை உடையது என்று கூறினார்.

## ஆணவத்தை அறிந்தவர்

ஒரு சமயம் நாரதருக்கும் தும்புருவிற்கும் இடையே சச்சரவு ஏற்பட்டது. இசைக்கலையில் தாம்தாம் முதன்மை மிக்கவர்கள் என்று வாதிட்டனர். பின் இருவரும் ஆஞ்சநேயரிடம் வந்து தீர்ப்பளிக்கும்படி வேண்டினர். ஆஞ்சநேயர் அவர்களை வரவேற்று உபசரித்து ஓரிடத்தில் அமரச் செய்தார். பின் இராமபிரானைப்பற்றி மிக இனிமையாகப் பாடி கல்லை உருகச் செய்தார். மறுபடியும் பாடி கல்லை இறுகச்செய்துவிட்டு, உங்களில் யார் கல்லும் உருகும்படி பாடுகிறீர்களோ, அவர்களுக்கே வெற்றி என்றார். இதைக்கண்டு வியந்த நாரதரும் துரும்புவும் தங்களால் இயன்ற மட்டும் பாடி முடியாமற் போகவே, ஆணவம் இழந்து ஓம்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாங்கம்

| ஜுலை | ஆனி | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 17 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 7.26 - 8.56<br>11.56 - 1.26<br>10.26 - 11.56<br>1.26 - 2.56 | நவமி பி.இ 4.16<br>ரேவதி மு.இ 8.50 சித்தம்<br>நவமி பி.இ 4.16 வரை | |
| 02 | 18 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 2.56 - 4.26<br>10.26 - 11.56<br>8.56 - 10.26<br>11.56 - 1.26 | தசமி பி.இ 4.50<br>அச்சுவினி மு.இ 9.57<br>அமிர்தசித்தம் | |
| 03 | 19 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 11.57 - 1.27<br>4.27 - 5.57<br>7.27 - 8.57<br>10.27 - 11.57 | ஏகாதசி பி.இ 5.53<br>பரணி மு.இ 11.33<br>சித்தாமிர்தம் | ஏகாதசி விரதம் |
| 04 | 20 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 1.27 - 2.57<br>7.27 - 8.57<br>5.57 - 7.27<br>8.57 - 10.27 | துவாதசி முழுவதும்<br>கார்த்திகை பி.இ 1.33<br>மரண | கார்த்திகை விரதம் |
| 05 | 21 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 10.27 - 11.57<br>5.57 - 7.27<br>2.57 - 4.27<br>7.27 - 8.57 | துவாதசி கா 7.20<br>சோகினி மரண<br>பி.இ 3.53 | பிரதோஷ விரதம் |
| 06 | 22 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 8.58 - 10.28<br>2.58 - 4.28<br>1.28 - 2.58<br>5.58 - 7.28 | திரியோதசி மு.ப 9.07<br>மிருகசீரடம் முழுவதும்<br>சித்தம் | |
| 07 | 23 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 4.28 - 5.58<br>8.58 - 10.28<br>11.58 - 1.28<br>2.58 - 4.28 | சதுர்த்தசி மு.ப. 11.03<br>மிருகசீரிடம்<br>மரண கா 6.24 | அமாவாசை<br>விரதம் |
| 08 | 24 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 7.28 - 8.58<br>11.58 - 1.28<br>10.28 - 11.58<br>1.28 - 2.58 | அமாவாசை பி.ப 12.57<br>திருவாதிரை மு.ப 8.59<br>சித்தாமிரதம் | |
| 09 | 25 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 2.58 - 4.28<br>10.28 - 11.58<br>8.58 - 10.28<br>11.58 - 1.28 | பிரதமை பி.ப 2.45<br>புநர்பூசம் மு.ப 11.26<br>சித்தம் | |
| 10 | 26 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 11.58 - 1.28<br>4.28 - 5.58<br>7.28 - 8.58<br>10.28 - 11.58 | துதியை பி.ப 4.17<br>பூசம் சித்தம் பி.ப 1.39 | |
| 11 | 27 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 1.29 - 2.59<br>7.29 - 8.59<br>5.59 - 7.29<br>8.59 - 10.29 | திருதியை பி.ப 5.26<br>ஆயிலியம் பி.ப 3.30<br>சித்தாமிர்தம் | |
| 12 | 28 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 10.29 - 11.59<br>5.59 - 7.29<br>2.59 - 4.29<br>7.29 - 8.59 | சதுர்த்தி மா 6.07<br>மகம் மரண பி.ப 4.53 | சதுர்த்தி விரதம்,<br>மாணிக்கவாசகர்<br>குருபூஜை |
| 13 | 29 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 8.59 - 10.29<br>2.59 - 4.29<br>1.29 - 2.59<br>5.59 - 7.29 | பஞ்சமி மா 6.18 பூரம்<br>சித்தம் பி.ப 5.47<br>ஸ்கந்த பஞ்சமி இரவு<br>நடேசரபிஷேகம் | |
| 14 | 30 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 4.30 - 6.00<br>9.00 - 10.30<br>12.00 - 1.30<br>3.00 - 4.30 | ஷஷ்டி மா 5.59 உத்தரம்<br>மா 6.12 அமிர்தம்<br>உதயம் நடேசர் ஆனி<br>உத்தர தரிசனம் | குமாரஷஷ்டி<br>விரதம் |
| 15 | 31 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 7.30 - 9.00<br>12.00 - 1.30<br>10.30 - 12.00<br>1.30 - 3.00 | ஸப்தமி பி.ப 5.14<br>அத்தம் மா 6.07 சித்தம்<br>அட்டமி பி.ப 5.14ல் மேல் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | ஆடி<br>32 | ராகு 3.00 - 4.30<br>சுப 10.30 - 12.00<br>எம 9.00 - 10.30<br>குளி 12.00 - 1.30 | அட்டமி பி.ப 3.59<br>சித்திரை பி.ப 5.36<br>சித்தம்<br>அட்டமி - நவமி | |
| 17 | 01 | ராகு 12.00 - 1.30<br>சுப 4.30 - 6.00<br>எம 7.30 - 9.00<br>குளி 10.30 - 12.00 | நவமி பி.ப 2.23 சுவாதி<br>பி.ப 4.43 சித்தம்<br>நவமி பி.ப 2.33 வரை | |
| 18 | 02 | ராகு 1.30 - 3.00<br>சுப 7.30 - 9.00<br>எம 6.00 - 7.30<br>குளி 9.00 - 10.30 | நவமி பி.ப 12.27<br>விசாகம் பி.ப 3.33<br>சித்தம் கரிநாள் | |
| 19 | 03 | ராகு 10.31 - 12.01<br>சுப 6.01 - 7.31<br>எம 3.01 - 4.31<br>குளி 7.31 - 9.01 | ஏகாதசி மரண<br>மு.ப 10.18 அனுசம்<br>சித்தம் பி.ப 2.09 சயன | சயன ஏகாதசி<br>விரதம் |
| 20 | 04 | ராகு 9.01 - 10.31<br>சுப 3.01 - 4.31<br>எம 1.31 - 3.01<br>குளி 6.01 - 7.31 | துவாதசி கா 7.57<br>திரயோதசி பி.இ 5.29<br>கேட்டை பி.ப 12.35<br>சித்தம் | சனிப்பிரதோஷ<br>விரதம் |
| 21 | 05 | ராகு 4.31 - 6.01<br>சுப 9.01 - 10.31<br>எம 12.01 - 1.31<br>குளி 3.01 - 4.31 | சதுர்த்தசி பி.ப 3.03<br>மூலம் மு.ப 10.56<br>அமிர்தசித்தம் | |
| 22 | 06 | ராகு 7.31 - 9.01<br>சுப 12.01 - 1.31<br>எம 10.31 - 12.01<br>குளி 1.31 - 3.01 | பூரணை பி.இ 12.42<br>பூராடம் சித்தம்<br>மு.ப 9.19 | பூரணை விரதம்<br>பட்டினத்தடிகள்<br>குருபூஜை |
| 23 | 07 | ராகு 3.02 - 4.32<br>சுப 10.32 - 12.02<br>எம 9.02 - 10.32<br>குளி 12.02 - 1.32 | பிரதமை மு.இ 10.28<br>உத்தராடம் மு.ப 7.48<br>சித்தம் முதலாம்<br>ஆடிச் செவ்வாய் | |
| 24 | 08 | ராகு 12.02 - 1.32<br>சுப 4.32 - 6.02<br>எம 7.32 - 9.02<br>குளி 10.32 - 12.02 | துதியை மு.இ 8.27<br>திருவோணம் சித்தம்<br>கா 6.24 அவிடம் மரண<br>பி.இ 5.17 | |
| 25 | 09 | ராகு 1.32 - 3.02<br>சுப 7.32 - 9.02<br>எம 6.02 - 7.32<br>குளி 9.02 - 10.32 | திருதியை மா 6.44<br>சதயம் மரண பி.இ 4.27 | |
| 26 | 10 | ராகு 10.32 - 12.02<br>சுப 6.02 - 7.32<br>எம 3.02 - 4.32<br>குளி 7.32 - 9.02 | சதுர்த்தி பி.ப 5.22<br>பூரட்டாதி பி.இ 4.03<br>சித்தம் | சங்கடஹரசதுர்த்தி<br>கரிநாள் |
| 27 | 11 | ராகு 9.02 - 10.32<br>சுப 3.02 - 4.32<br>எம 1.32 - 3.02<br>குளி 6.02 - 7.32 | பஞ்சமி பி.ப 4.25<br>உத்தரட்டாதி சித்தம்<br>பி.இ 4.02 | |
| 28 | 12 | ராகு 4.32 - 6.02<br>சுப 9.02 - 10.32<br>எம 12.02 - 1.32<br>குளி 3.02 - 4.32 | ஷஷ்டி பி.ப 3.55 ரேவதி<br>அமிரதம் பி.இ 4.31 | |
| 29 | 13 | ராகு 7.33 - 9.03<br>சுப 12.03 - 1.33<br>எம 10.33 - 12.03<br>குளி 1.33 - 3.03 | ஸப்தமி பி.ப. 3.57<br>அச்சுவினி பி.இ 5.32 சித்தம்<br>அட்டமி பி.ப 3.57ல் மேல் | |
| 30 | 14 | ராகு 3.03 - 4.33<br>சுப 10.33 - 12.03<br>எம 9.03 - 10.33<br>குளி 12.03 - 1.33 | அட்டமி பி.ப. 4.29<br>பரணி முழுவதும் சித்தம்<br>அட்டமி-நவமி<br>இரண்டாம் ஆடிச் செவ்வாய் | |
| 31 | 15 | ராகு 12.03 - 1.33<br>சுப 4.33 - 6.03<br>எம 7.33 - 9.03<br>குளி 10.33 - 12.03 | நவமி பி.ப 5.29 பரணி<br>கா 7.00 சித்தாமிரதம்<br>நவமி பி.ப 5.29 வரை | கார்த்திகை விரதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜுலை

## 2013 ஆம் ஆண்டின் அட்டமி - நவமி
## (வளர்பிறை தேய்பிறை)

| | | | | |
|---|---|---|---|---|
| 01 | தே.பி நவமி | பின் இரவு | 4.18 | வரை |
| 16 | வ.பி அட்டமி | பி.பகல் | 3.57 | வரை |
| 17 | வ.பி நவமி | நவமி பி.பகல் | 2.28 | வரை |
| 30 | தே.பி அட்டமி | அட்டமி பி.பகல் | 4.57 | வரை |
| 31 | தே.பி நவமி | நவமி பி.பகல் | 5.29 | வரை |

# ஜுலை மாதத்திற்கான விரதங்கள்




| | | | | |
|---|---|---|---|---|
| 03ம் | திகதி | புதன் | - | ஏகாதசி விரதம் |
| 04ம் | திகதி | வியாழன் | - | கார்த்திகை விரதம் |
| 05ம் | திகதி | வெள்ளி | - | பிரதோஷ விரதம் |
| 07ம் | திகதி | ஞாயிறு | - | அமாவாசை விரதம் |
| 12ம் | திகதி | வெள்ளி | - | சதுர்த்தி விரதம் |
| 14ம் | திகதி | ஞாயிறு | - | குமாரஷஷ்டி விரதம் |
| 19ம் | திகதி | வெள்ளி | - | சயன ஏகாதசி விரதம் |
| 20ம் | திகதி | சனி | - | சனிப்பிரதோஷ விரதம் |
| 22ம் | திகதி | திங்கள் | - | பூரணை விரதம் |
| 26ம் | திகதி | வெள்ளி | - | சங்கடஹரசதுர்த்தி விரதம் |
| 31ம் | திகதி | புதன் | - | கார்த்திகை விரதம் |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



School of
# Graphic Design

*Step Towards a Bright Future...*

**JUST 1 MONTH**

**(LEARN FROM THE GRAPHIC EXPERT)**

**~~Rs. 5,725~~ Rs. 3,999 only**

**flex Institute** 4, IBC Road, Colombo 6.
Hotline: 0777-555026

JEYECHANDRANS
The Art of Fashion
முகூர்த்தப் பட்டுப்புடவைகளுக்கு ராசியான ஒரே இடம்






ஜூன் மாத
கேள்வி - பதில்
போட்டியில்
**வெற்றியாளர்**

திருமதி K.விஜயலக்ஷ்மி
பம்பலப்பிட்டி

**ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் இரண்டு ரூபங்கள் என்ன?**

- பாமா-ருக்மணி
- ஸ்ரீதேவி-பூதேவி
- உமா-மஹேஸ்வரி

**JEYECHANDRANS**

கேள்வி பதில் போட்டியில்
கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடையை கூறி
குலுக்கல் முறையில் வெற்றிபெறும் போட்டியாளருக்கு

JEYECHANDRANS TEXTILE
வழங்கும் பட்டுப்புடவை பரிசாக வழங்கப்படும்.

**(1st July - 15th July)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வர்ணம் தீட்டுங்கள்!



சிறுவர்களுக்கான
ART CLASSES
வயது - 6-12 வரை
இவ் வகுப்பிற்கு 10 சிறுவர்கள் மாத்திரமே சேர்த்துக் கொள்ளப்படுவர்.
சனிக்கிழமைகளில்
காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை
flex Institute
Step Towards a Bright Future
Call : 0777-555026
4, IBC Road, Wellawatte

## இடைவெளியை நிரப்புங்கள்!

1. காயத்ரி வடிவம்

| | | | |
|---|---|---|---|
| தா | | | மை |

2. கைகேயியின் தோழி

| | | | |
|---|---|---|---|
| | ந் | | ரை |

3. ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டியது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இ | | ட் | சி | | ம் |

4. அமாவாசை மற்றும் பௌர்ணமிக்கு மறுநாள்

| | | | |
|---|---|---|---|
| பி | | த | |


5. இராமர் சிவலிங்க பூஜை செய்த இடம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இ | | மே | | வ | | ம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரபல பின்னணிப்பாடகர் ரி.எம். சௌந்தரராஜன் அவர்களின் புதல்வன் ரி.எம்.எஸ். செல்வகுமார் அவர்களுக்கு Flex அருள் ஆசிரியர் கே.யோகேந்திரன் வரைந்து வழங்கிய பிரபல திரைப்பட பின்னணிப்பாடகரும் பக்திப்பாடல்களைப் பாடி பக்தர்களின் உள்ளங்களை உருக்கிய காலஞ் சென்ற T.M.சௌந்தரராஜன் அவர்களின் ஓவியம்.







A portrait is a Perfect Gift

PORTRAIT
IN PASTEL / PENCIL



Call : 0777 614 186 | E-mail : flexvijay@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## flex அருள் தகவல்கள்



தெஹிவளை போதிருக்காராம வீதி, ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலய சுவாமி சந்திரசேகரன் அவர்களது ஓவியத்தை, அதனை வரைந்த Flex அருள் ஆசிரியர் கே.யோகேந்திரன் மற்றும் Flex Group நிர்வாக இயக்குனர் திரு P.விஜய் ஆகியோர் சுவாமி சந்திரசேகரன் அவர்களுக்கு வழங்கினர்.

ஜுன் மாத FLEX அருள் JEYECHANDRANS கேள்வி பதில் போட்டியில் கேட்கப்பட்ட கேள்விக்கு "பொற்கைப் பாண்டியன்" என்ற சரியான விடையைக் கூறி குலுக்கல் முறையில் தெரிவான இல.12 1/1, காசல் லேன், பம்பலப்பிட்டியைச் சேர்ந்த திருமதி K.விஜயலக்ஷ்மி அவர்களுக்கு JEYECHANDRANS வழங்கிய பட்டுப்புடவை ஒன்று FLEX GROUP நிர்வாக இயக்குனர் திரு P.விஜய் அவர்களால் வழங்கப்பட்டது.







ஜுன் மாத FLEX அருள் CD WORLD MUSIC CENTRE கேள்வி பதில் போட்டியில் கேட்கப்பட்ட கேள்விக்கு "பீஷ்மர்" என்ற சரியான விடையைக் கூறி குலுக்கல் முறையில் தெரிவான "C" Block இல.6, முதலாவது மாடி, வேலுவணராம தொடர்மாடி, கொழும்பு 06 ஐ சேர்ந்த திரு. V.T.ராஜாராம் அவர்களுக்கு CD WORLD MUSIC CENTRE வழங்கிய AUDIO CD ஒன்று FLEX GROUP நிர்வாக இயக்குனர் திரு P.விஜய் அவர்களால் வழங்கப்பட்டது.

ஆகஸ்ட் மாதத்திற்கான விளம்பரங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது
எம்மை தொடர்புகொள்ள
Flex Publications
04, IBC Road, Wellawatte.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூலை மாதத்திற்கான ராசிபலன்




ஜூலை மாதத்தையும் மேலான மாதமென்று கூறமுடியும். கட்டியம் கூறுகின்றன கிரகங்கள். தைரியம் மிகுந்து விடும். தன்னம்பிக்கை கூடிவரும். துணிச்சலுடன் செயல் தொடங்கித் தொடர் வெற்றி பெறுவீர்கள். அணிகலன்கள் வாங்கிடலாம். அங்குமிங்கும் போய் வரலாம். வணிகத்திலே மேன்மையுண்டு. வைத்தியச் செலவு வந்திடலாம். வருத்தப்படத் தேவையில்லை. மலை போல் வந்த துயர் பனிபோல் விலகிவிடும். 65% வரை நற்பலன்கள் உண்டு.

**சாதகமான தேதிகள்: 1, 3, 6, 9, 10, 12, 15, 20, 22, 28, 29, 31.**




16-ஆம் தேதிக்கு மேல் ஆதவன் அழகாக 3-ஆம் இடத்தில் பிரவேசிப்பதால் அற்புதமான பலன் கிட்டும். சுக்கிரனும் புதனும்கூடத் தங்கள் பங்களிப்பைச் செய்கிறார்கள். எனவே, ஜூலை மாதத்தை மேலான மாதமென்பேன். மனைவியால் நலம் வரும். மக்களால் சுகம் வரும். முனைந்திடும் செயல்களெல்லாம் முத்தாய்ப்பாய் முடிந்திடும். நினைவுகள் இதம் பெறும். நிம்மதி நிறைந்திருக்கும். வெகுமதி ஒன்று வெகு தொலைவிலிருந்து வந்து சேரும். 75% நலன்களை எடுத்துக் கொள்ளலாம்.

**சாதகமான தேதிகள்: 1, 3, 7, 10, 15, 17, 18, 21, 25, 29.**




எடுத்த காரியத்தை எண்ணம் போல் முடிக்க முடியாமல் அடுக்கடுக்காய் இடர்கள் வந்தாலும் எதிர்நீச்சல் போட்டு எப்படியும் சாதித்து விடுவீர்கள். முடுக்கிவிட்ட பம்பரம் போல் முனைந்து செயல்பட்டு முன்னேற்றம் காண்பீர்கள். துடுக்குத்தனமான பேச்சினால் துயரம் விளைந்திடலாம். ஆதலால் நாவடக்கம் தேவை. கிட்டத்தட்ட 35% வரை நன்மைகளைப் பெறமுடியும்.

**சாதகமான தேதிகள்: 1, 3, 7, 10, 15, 18, 21, 23, 28. 31.**




சூரியனின் சஞ்சாரம் சரியில்லை என்ற போதிலும், ஜூலை மாதமும் சுகமான மாதம் தான் என்று சுக்கிரனும் புதனாரும் சொல்கிறார்கள். சற்று அலைந்து திரிய வேண்டியிருக்கும். ஆனால், பட்ட பாட்டிற்கு ஏற்ற பலன் நிச்சயம் உண்டு. சில விஷயங்களுக்காக மன அழுத்தத்துடன் காத்திருக்க வேண்டியிருக்கும். காத்திருப்புக்கு ஏற்ற பலன் கடைசியில்தான் கையில் வரும். உடல் நலத்தில் கவனம் தேவை. வீணான விரையச் செலவுகளும் உண்டு. அவசியமான ஆனந்தச் செலவுகளும் உண்டு. கிட்டத்தட்ட 55% வரை நன்மைகளை அடைய முடியும்.

**சாதகமான தேதிகள்: 2, 4, 10, 14, 15, 26, 27.**




ஜூலை மாதமும் மேலான மாதம்தான் என்று சாட்சி சொல்கின்றன கிரகங்கள்! ஆட்சியில் இருப்போரால் அனுகூலங்கள் கிட்டுமென்பேன். சூழ்ச்சி செய்வோரைத் தூர விலக்கி மாட்சி அடைவீர்கள். இனிய பல காட்சி காண்பீர்கள். பேச்சுத் திறமையால் பெருலாபம் குவிப்பீர்கள். பாய்ச்சிகை உருட்டிவிட்டால் காய்களெல்லாம் உங்கள் சார்பாகவே உருளுமென்பேன். முழுவீச்சுடன் செயல்பட்டு முன்னேற்றம் அடைவீர்கள். 75% இனிய மாதம் இது!

**சாதகமான தேதிகள்: 3, 5, 10, 13, 16, 18, 21, 22, 26, 29.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜுலை மாதத்திற்கான ராசிபலன்




ஜுலை மாதம் சுகமான மாத மென்பேன். சொல்கின்றன, கிரகங்கள். கருதியவை பலவற்றைக் கட்டாயம் சாதிப்பீர். சுருதி கூட்டுவீர் உங்கள் சுகவாழ்வுக்கு! தேக்கமின்றி ஆக்கம் பல சேர்ப்பீர்கள். வாழ்வின் நோக்கம் என்னவென்று தெளிவாகத் தெரிந்து கொண்டு அதை நோக்கி ஊக்கத்துடன் பயணிப்பீர். தேக்கமாகி நின்றவை அனைத்தும் உங்களைத் தேடி வந்து சேருமென்பேன். 70% வரை ஏற்றங்கள் பெற்றிடலாம்.

**சாதகமான தேதிகள்:** 4, 6, 10, 14, 15, 20, 22. 26, 29.




ஜீவன ஸ்தானத்தில் சூரியன் பிரவேசிப்பதால், துணிவு மிகுந்து விடும். சுறுசுறுப்பு கூடிவிடும். பணிவுடனே நடந்து பல காரியங்கள் சாதிப்பீர்கள். பிணி பலவும் போய் மறையும். பிரச்சனைகள் ஏதுமில்லை. அணிகலன்கள் வாங்கிடலாம். ஆசைகளை நிறைவேற்றிடலாம். உல்லாசப் பயணமுண்டு. உற்சாக விருந்துண்டு. கல்வி சம்பந்தமாக எதிர்பார்த்த பல விஷயங்கள் நல்விதமாக நடந்தேறும். 60% வரை அடையலாம் அனுகூலங்களை!

**சாதகமான தேதிகள்:** , 5, 6, 10, 13, 17, 23, 25, 29, 31.




நலம் தரும் மாதமிது. நல்ல பலன் பெறும் மாதமிது. இன்பப் பயணம் சென்றிடலாம். இனிய அனுபவம் பெற்றிடலாம். அன்புக் கதைகள் பேசிடலாம். ஆனந்தத்தில் மூழ்கிடலாம். துன்பக் கதைக்கு முடிவுரையைத் துணிந்தே எழுதிடலாம். சூரியனின் சஞ்சாரம் சரியில்லை என்பதால் ஏதாவது தேவையற்ற வம்பு தும்பு வந்திடலாம். உடல்நலத்திலும் பாதிப்பு ஏற்படலாம். எச்சரிக்கை தேவை. 55% வரை நன்மைகளை எதிர் பார்க்கலாம்.

**சாதகமான தேதிகள்:** 2, 6, 14, 22, 25, 29, 31.




சூரியன் 7, 8 ஆம் இடங்களில் சஞ்சரிப்பதால் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாதமிது! உச்சரிக்கும் வார்த்தைகளில் உஷாராய் இருந்திடுங்கள். நச்சரிக்கும் நண்பர்களை நயமாகச் சமாளியுங்கள். பாவையரின் பச்சரிசிப் பல்லழகைப் பார்த்து மயங்க வேண்டாம். மயங்கினால் முச்சந்தி வரை வந்து நிற்கும் சச்சரவால் சங்கடப் பட நேரிடலாம். கெடுபலன்கள் நடந்த போதிலும் அவற்றையெல்லாம் சமாளித்துத் தலைநிமிர்ந்து நடப்பீர்கள். 55% வரை நன்மைகள் உண்டு.

**சாதகமான தேதிகள்:** 2, 4, 7. 10. 14, 21, 28, 29.




இந்த ஜுலை மாதத்தை ஆலைக் கரும்பாய் இனிக்கும் மாதமென்பேன். மங்கையரால் லாபம் உண்டு. மனைவி வழியில் யோகமுண்டு. தங்கம் வாங்கிடலாம். தன்னிறைவு பெற்றிடலாம். உங்கள் பிள்ளைகளின் வளர்ச்சியிலே உள்ளம் நெகிழ்ந்து மகிழ்வீர்கள். நிலம், வீடு, வாகனம் நினைத்த படி பலன் கொடுக்கும். நலம் பலவும் பெற்றிடலாம். நல்ல மாதமிது, நடைமுறையில் காண்பீர்கள். அல்லல் நீக்கிக் காக்கும் ஆண்டவனின் அருளாலே வாழ்வில் திருப்பம் ஒன்றைச் சந்திப்பீர். 60% வரை அற்புதங்கள் நிகழுமென்பேன்.

**சாதகமான தேதிகள்:** 3, 6, 10, 11, 15, 20, 21, 26, 28, 30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜுலை மாதத்திற்கான ராசிபலன்




கிரகங்கள் உங்களுக்கு ஆதரவாக அணிவகுத்து நிற்பதால் புதியதொரு நபராலே புதுப் பாதை கண்டிடுவீர். இதயம் மகிழும்படி இதமான சம்பவங்கள் நடந்தேறும். எதையும் சாதிப்பீர். ஏராளம் சம்பாதிப்பீர். பொருளாதார வளர்ச்சியிலே அசையாத இடத்தை அடைந்து விடுவீர்கள். அற்புதமான மாதமிது! அகுபவித்து உணர்வீர்கள். கற்பனைக் கனவொன்று உங்கள் கையில் வசப்படும் என்பதால் கணக்கில்லா ஆனந்தம் அடைவீர்கள். வாரிக் கொள்வீர்கள் 60% அனுகூலங்களை!

சாதகமான தேதிகள்: 4, 5, 7, 15, 18, 20, 27, 31.




இந்த மாதத்தில் இன்னல் சில உண்டென்றாலும் கன்னல் இனிப்பைப் போல் நற்பலன்கள் உண்டு. மின்னலிடைமங்கையரால் மிகப் பெரிய நன்மை வரும். பின்னர் வரும் காலத்திற்குப் பிரமாதமாய்த் திட்டமிட்டு, வண்ணமயமாய் வாழ்வை வடிவமைத்துக் கொள்வீர்கள். எண்ணமெல்லாம் இன்ப மயம்! இதயமெல்லாம் அன்புமயம்! சொன்ன சொல்லைச் சொன்ன படி நிறைவேற்றிப் பாராட்டுப் பெறுவீர்கள். 55% வரை அடையலாம் சிறப்புகளை!

சாதகமான தேதிகள்: 3, 6, 10, 14, 21, 27, 30.

**இடைவெளியை நிரப்புங்கள்!**

01.தாய்மை 02. மந்தரை 03. இலட்சியம் 04. பிரதமை 05. இராமேஸ்வரம்

ஆன்மீக வினாவிற்கான விடையை கூறி பரிசு பெறுங்கள்!




நவரத்ன கற்களில் கேதுக்குரிய கல் என்ன?

- பவளம்
- வைடூரியம்
- முத்து

(1st July-15th July)

Call Monday - Friday From 9am - 5pm.

Call Now & Win பக்தி பாடல்கள் Audio CD

Flex Publications 0778 335 552

முன்னணி பாடகர்கள் பாடிய பக்திப்பாடல்கள் இங்கு கிடைக்கும்

CD WORLD MUSIC CENTRE

No. 298, Galle Road, Wellawatte.
Tel: 0112 554 481

100 Nos VISITING CARDS Rs. 1,300/=

Free! Logo Design & Artworks

flex GRAPHIC

COMPANY NAME BOARDS FIXING

FLEX DIGITAL PRINTING

0777 614 186

இல்லங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் விருத்திக்கு!



ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்

ORDER NOW



பதக்கம் சிலை பாதுகை யந்திரம் ஆமை

Sri Lanka 0777 614 186

flex 4, IBC, Wellawatte, Colombo 06, Sri Lanka.


மேலதிக விபரங்களை தென்னிந்திய தொலைக்காட்சியில் காலை மற்றும் இரவில் கண்டு களியுங்கள்!

Z தமிழ் CAPTAIN TV MEGA TV JAYA TV

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்திக் கதைகள்

-யோகா




# கணம்புல்ல நாயனார்

வடவெள்ளாற்றின் தென்கரையில் இருக்கு வேளூர் என்ற செழுமையான ஊர் ஒன்று உள்ளது. அங்கு சோலைகளிலுள்ள பெரிய பலாப் பழங்களின் நீண்ட சுளைகளிலிருந்து பொழியும் தேன் வெள்ளம் மடுக்களை நிறைத்து, வயல்களை விளையச் செய்யும்.

அங்கு ஒரு சிவனடியார் வாழ்ந்து வந்தார். அவர் அங்கு வாழும் பெருங்குடி மக்களுக்கெல்லாம் தலைவராக விளங்கினார். அவர் பெருஞ்செல்வம் படைத்தவர். ஒப்பற்ற பெருங்குணத்தால் மேன்மையுற்று விளங்கி வந்தார். அவர் சிவபெருமானின் திருவடிகளே உண்மையான பொருள் என்று உணர்ந்து சிவபெருமானிடம் பேரன்பு கொண்டிருந்தார். அவர் சிவன் கோயிலுக்குத் திருவிளக்கிட்டு, எரிப்பதையே தாம் பெற்ற பெருஞ்செல்வத்தின் பயனாகக் கருதி, நாள்தோறும் ஆலயத்திலுள்ள விளக்குகளுக் கெல்லாம் எண்ணெய் வார்த்து ஏற்றி எரியச் செய்து நம்பிரானை நாவாரத் துதித்து வந்தார். இவ்வாறு திருத்தொண்டு புரிந்து வந்த அவருக்குச் செல்வம் குறைந்து வறுமை வந்தடைந்தது.

அதனால் அவர், அவ்வூரை விட்டுத் தில்லைப்பதியான சிதம்பர நகருக்குச் சென்றார். அங்கு அம்பலத்தில் திருநடனம் செய்தருளும் நடராசப் பெருமானின் திருவடிகளைப் பேரன்போடு வணங்கினார். பிறகு அவர் சிதம்பரத்திலேயே தங்கியிருந்து, தம்முடைய வீட்டிலுள்ள பொருள்களையெல்லாம் விற்று விற்று, அங்குள்ள திருப்புலீச்சுரம் என்னும் திருக்கோயிலில் திருவிளக்கேற்றும் திருப்பணியைச் செய்து வந்தார். இவ்வாறு செய்துவரும் நாளில், அவர் வீட்டிலுள்ள பொருள்களெல்லாம் தீர்ந்து விட்டன. பிறகு, அவர் அயலாரிடம் சென்று யாசிப்பதற்கு அஞ்சி தமது உடலின் முயற்சியாலே கணம் புற்களை அரிந்தெடுத்து வந்து அவற்றை விற்று அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு, நெய் வாங்கித் திருவிளக்குகளை எரித்து வந்தார். கணம் புல்லறுத்து விளக்கு எரித்ததால் அவருக்கு கணம்புல்லர் என்ற பெயர் உண்டாயிற்று.

ஒருநாள், கணம் புல்லர் மெய்வருந்த அரிந்து எடுத்து வந்த கணம் புல்லானது, எவ்விடத்திலும் விலை போகவில்லை. ஆயினும் அவர் தம் திருவிளக்குப் பணியைக் கைவிடாமல், அந்தப் புல்லையே கொண்டு வந்து அழகிய திருவிளக்கில் இட்டு எரித்தார். ஆனால், அந்தப்புல், வழக்கம்போல இறைவரது திருமுன்பு திருவிளக்கு எரிக்கும் முறைப்படியுள்ள முதல் சாமம் வரைக்கும் கூட எரிப்பதற்குப் போதவில்லை. அதனால் கணம் புல்லர் அடுத்த விளக்கிற்குத் தமது தலையிலுள்ள சிகையையே விளக்கில் மடித்து வைத்து பேரன்புப் பெருக்கினால் தம் என்பும் கரைந்துருகும்படி தீ மூட்டி விளக்காக எரித்தார். உடனே தலைத்திருவிளக்கு எரித்த திருத்தொண்டருக்கு சிவபெருமான் திருவருள் புரிந்தார். கணம் புல்ல நாயனார், சிவலோகத்தை அடைந்து இனிதாக வணங்கி வீற்றிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காரி நாயனார்


வேதியர் நிறைந்து வாழும் 'திருக்கடவூர்' என்னும் பதியிலே காரியார் என்னும் ஒரு பெரியார் வாழ்ந்து வந்தார். அவர், தம்முடைய தமிழ்ப் புலமையினால் சொற்கள் விளக்கமாகி உள்ளுறை பொருளாகிய வீடு பேற்றின் நிலை வெளிதோன்றாமல் பொருள் மறைந்து கிடக்கும்படி தமது பெயரால் காரிக்கோவை என்ற நூலை இயற்றினார். அதனால் தமிழ் மூவேந்தரிடமும் சென்று மன்னர்களின் நட்பைப் பெற்றார். அவர்கள் மகிழும் வண்ணம் தம் நூலை விரித்து பொருளுக்கேற்ற சொற்களை உரை நயம் பெறக் கூறி பெருஞ் செல்வக் குவியல்களையும் பெற்றார்.

அவர் மூவேந்தர்களிடம் பெற்று வந்த நிதிக் குவியல்களைக் கொண்டு பிறைசூடிப் பெருமான் இனிதமரும் சிவன் கோயில்கள் பலவற்றைக் கட்டினார். யாவரும் மனம் உவக்கும்படி இன்பமொழிப் பயன் இயம்பி சிவனடியார்களுக் கெல்லாம் பெரும் நிதியங்களை அன்புடன் அளித்து வந்தார். சிவ பெருமானின் திருக்கயிலாய மலையை எப்பொழுதும் மறவாமலிருந்தார்.

இவ்வுலகில் அவர் தம் புகழை நிலை நிறுத்தி, இடையறாத அன்பினால் சிவபெருமானுடைய திருவருளைப் பெற்று, மனம் போலவே அமைந்த உடலுடன் கூடி ஜீவன் முக்தராய் வடகயிலை மலைக்குப் போய்ச் சேர்ந்தார்.

அம்பலவாணரின் அடிபேணும் காரியாரின் கழல் வணங்குவோம். "காரிக்கும் அடியேன் என்றார்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகத்தான மந்தரை

மந்தரையைக் கூனி என்றும், அழகு அற்றவள் என்றும் சிலர் வர்ணிக்கிறார்கள். ஆனால் பத்ம புராணம் அவளை ஓர் அப்சர ஸ்த்ரி என்கிறது.

அவளே பெண்ணுருவம் எடுத்து கேகைய நாட்டின் அரண்மனை அந்தப்புரத்தில் பணிப் பெண்ணாக வந்தாள் என்றும், கைகேயிக்குப் பணிபுரிய ஆரம்பித்தாள் என்றும் பத்ம புராணம் தெரிவிக்கிறது.

மந்தரையின் பணிவிடைகளிலும் பேச்சிலும் சிறு வயதிலிருந்தே ஈர்க்கப்பட்ட கைகேயி அவளை விட்டு நிமிடங்கூடப் பிரிந்து இருக்கமாட்டாள்! அதனால் தான் கேகைய மன்னர் தன் மகள் கைகேயியை தசரத சக்கரவர்த்திக்கு விவாகம் செய்து கொடுத்தபோது மந்தரையையும் மகளுடன் அயோத்திக்கு அனுப்பி வைத்தார்.

ஒரு பணிப்பெண் என்ற முறையில் கைகேயுடன் பழகவில்லை மந்தரை! அயோத்தியின் அந்தப்புரத்தில் எங்கு வேண்டுமானாலும் புகுந்து சர்வ சுதந்திரமாகத் திரியும் ஒரு தோழியாகவே வாழ்ந்து வந்தாள் அவள்.

ஸ்ரீராமபிரானுக்கு பட்டாபிஷேகம் செய்யப்போகும் செய்தியை மந்தரை அறிந்ததும், அதை எப்படியாவது தடுக்க வேண்டும் என்று திட்டமிட்டாள். இரண்டு வரங்களை தசரத சக்கரவர்த்தியிடமிருந்து பெறுமாறு கைகேயியைத் தூண்டிவிட்டாள்.

(மந்தரையின் இந்த வாதம் ஒரு வேளை எடுபடாமல் போய்விட்டால் இராமாவதாரம் எடுத்த பயன் வீணாகிவிடுமே என்று தேவர்கள் கவலைப்பட்டார்களாம்!) இந்தச் செய்தியை துளசிதாஸ் ராமாயணம் கூறுகிறது என்று ஆதாரங்களை எடுத்துக்காட்டி தொடர்ந்தார் உபன்யாசகர் ஸ்ரீ சுந்தரகுமார்.

கைகேயிடம் பணிப்பெண்ணாக இருந்த மந்தரை, இரண்டு வரங்கள் தசரத சக்கரவர்த்தியிடமிருந்து கேட்டுப் பெற வேண்டிய ஒரு தேவையை கைகேயியிடம் சாமர்த்தியமாச் சொல்ல வேண்டுமே! சொன்னால் அதன்படி கைகேயி கேட்க வேண்டுமே! இதை நினைந்து வான வீதியில் தேவர்கள் கவலையோடு கூடி நின்றார்கள்.

சரஸ்வதிதேவியைப் பிரார்த்தனை செய்தார்கள். மந்தரையின் நாக்கில் சில மணி நேரம் தங்கி இருந்து அவளுக்குத் திறமையோடு பேசும் சக்தியை அருளுமாறு அவர்கள் வேண்டிக் கொண்டார்கள்.

தேவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு சரஸ்வதிதேவி மந்தரையின் நாவில் வந்து தங்கினாள்.

அந்த சரஸ்வதி கடாட்சம்தான் மந்தரையை மிகவும் மதி நுட்பத்துடன் கைகேயிடம் பேச வைத்தது. ராமன் முடி சூடப் போவதில் ஆனந்தம் கொண்டிருந்த கைகேயியை மந்தரையின் திறமையான வாதங்கள் மனம் மாறச் செய்தன. தசரதரிடம் இரண்டு வரங்கள் கேட்க வைத்தன. ராமாயணம் நடப்பதற்கே காரணமாக விளங்கின. தசரத சக்கரவர்த்தியிடமிருந்து இரண்டு வரங்களை கைகேயி பெறக் காரணமாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நதியின் பிழையன்று நறும் புனல் இன்மை"



ராமனுக்குப் பட்டம் இல்லையென்று தெரிந்ததும் லட்சுமணனுக்கு மிகுந்த கோபம் வருகிறது. "தேவர்கள், மானுடர்கள், வித்தியாதாரர்கள், நாகர்கள், மற்ற யார்தான் வரட்டும், மும்மூர்த்திகளே எதிர்த்து வரட்டும். கைகேயி எண்ணத்திற்கு நான் இடம் கொடுக்க மாட்டேன்" என்று சீறுகிறான்.

ராமன் அவனைச் சாந்தப்படுத்துகிறான். "நதியின் பிழையன்று, நறும் புனல் இன்மை" என்கிறார். அதாவது ஒரு நதியில் நீர் இல்லை யென்றால் அது நதியின் பிழையாகாது என்கிறார். கடைசியில் இது விதியின் பிழை, நீ இதற்கு என் கொல் வெகுண்டது?" என்று கேட்கிறார். அதாவது "இந்தக் காரியம் விதியினால் ஏற்பட்டது. நீ கோபித்துக் கொண்டு என்ன பயன்?" என்று கேட்கிறார்.

ஆனால் லட்சுமணனோ, "விதிக்கும் விதியாகும் என் வில்தொழில் காண்டி" என்கிறான். அதாவது "என் வில்லாற்றலைக் கொண்டு விதிக்கும் ஒரு முடிவு செய்வேன்" என்கிறான்.

விதியை எதிர்ப்பேன் என்று சொன்ன இதே லட்சுமணன் தான் பின்னர், "வெஞ்சின விதியினை வெல்லவல்லமோ", அதாவது "விதியை நம்மால் வெல்ல முடியுமோ?" என்று கேட்கிறான்.

மாரீசனின் குரலைக் கேட்டு, ராமனுக்கு ஏதோ ஆபத்து என்று நினைக்கிறாள் சீதை. உடனே லட்சுமணனைப் போய்ப் பார்க்கும்படி கூறுகிறாள். அவனோ, அவளை அக்காட்டில் தனியாகவிடப் பயப்படுகிறான். "ராமனுக்கு ஓர் ஆபத்தும் வராது" என்று அவளுக்குத் தைரியம் கூறுகிறான்.

ஆனால் சீதையோ, "நீ போகாவிடில் நான் நெருப்பில் விழுந்து என் உயிரை மாய்த்துக் கொள்வேன்" என்கிறாள்.

அப்பொழுதுதான் லட்சுமணன், "உங்கள் கட்டளையை நான் மறுக்க மாட்டேன். இதோ போகிறேன். வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ!" என்கிறான்.

இதனால் நடந்த விபரீதம் நமக்குத் தெரியும். அதனால் தான் பெரியவர்கள் "விதிவலிது" என்று சொல்லுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

flex Wellawatte Guide

இரு மாதங்களுக்கு
ஒரு முறை
வெளிவருகிறது!

தொடர்புகளுக்கு: 0777555026

# JULY 2013

| MON | TUE | WED | THU | FRI | SAT | SUN |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 + ▪ * | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

## June 2013

| MON | TUE | WED | THU | FRI | SAT | SUN |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 + ▪ * |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## August 2013

| MON | TUE | WED | THU | FRI | SAT | SUN |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 + ▪ * | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

விளம்பரங்கள் தந்துதவியவர்களுக்கு

**நன்றிகள் பலகோடி!**

உங்கள் விளம்பரங்களே எம்மை மேலும் பலப்படுத்தும்.

**நீங்கள் படித்துச் சுவைத்த தரமான இந்து மத சம்பந்தமான தகவல்களையும், இலங்கையில் அமைந்துள்ள கோயில்கள் பற்றிய தகவல்களையும் எமக்கு எழுதியனுப்பினால் சிறந்ததை நாம் பிரசுரிப்போம்.**

**Flex Publications**
(A Subsidiary of **Flex Graphic**)

04, IBC. Road, Wellawatte.
Tel:- 2364157, 2506114 Fax:- 2501766
www.flexguidemag.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவரை வந்த இதழ்கள்!

2010 டிசம்பர் | 2011 ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட்



செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் | 2012 ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே



ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் | 2013 ஜனவரி | பெப்ரவரி



மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை




எம்மை தொடர்புகொள்ள:

**Flex Publications**

04, IBC Road,
Wellawatte,
Colombo 06.

## கிடைக்கும் இடங்கள்

**ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில்**
359, காலி வீதி, கொழும்பு 04.

**கந்தையா அன் கம்பனி**
357, காலி வீதி, கொழும்பு 04.
(அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம் அருகில்)

**ஸ்ரீ மயூராபதி கோலில்**
17A, மயூரா பிளேஸ், கொழும்பு 05.

**ஸ்ரீ பத்ரகாளி அம்மன் தேவஸ்தானம்**
30/40-44, காலிங்க மாவத்தை, பொல்லஹேன்கெட

**ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயம்**
3/11, ஸ்ரீ போதிருக்காராம வீதி, தெஹிவளை.

**ஸ்ரீ ஐஸ்வர்யலக்ஸ்மி திருக்கோவில்**
ரொக்ஸி கார்டன், வெள்ளவத்தை.

**ஸ்ரீ வெங்கடேஸ்வரர் விஷ்ணு கோவில்**
100, கோவில் வீதி, கொழும்பு 15.

**ஸ்ரீ தேவி கருமாரியம்மன் கோவில்**
158, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
வெள்ளவத்தை

**ஸ்ரீ வரத விக்னேஸ்வரர் கோயில்**
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ ஞானசக்தி பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயம்**
கலஹா

**CD World Music Centre**
298, காலி வீதி, வெள்ளவத்தை

**Joy Glorious**
298, 298B, காலி வீதி, வெள்ளவத்தை

**Flex Publications**
4, IBC Road, வெள்ளவத்தை

Flex அருள் இதழினை விற்பனை செய்யும் விற்பனை விநியோகஸ்தர்களுக்கு
**மனப்பூர்வமான நன்றிகள்!**

இவ் இதழினை விற்பதற்கான விற்பனை விநியோகஸ்தர்கள் எம்மோடு தொடர்பு கொள்ளவும்.
**Tel: 0777 614 186**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WELLAWATTE GAS CENTER

## QUICK & EFFICIENT

**DELIVERY SERVICE TO YOUR DOORSTEP**

**HOME DELIVERY**
SERVICE

**While cooking,**
**always ensure free**
**and proper ventilation**




LITRO GAS
Dealer

Wellawatte Gas Center
36, Hampden Lane, Colombo 06.

Hotline : 077 368 3070
Contact : 2 367373 / 2 554648

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கையில் ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா புதிய ஆலய கட்டிட நிர்மாணப்பணி

இல. 188, புதுச்செட்டித்தெரு, கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ள ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்தில் கடந்த தைப்பூசத் தினத்தன்று (27.01.2013) அழகான வேலைப்பாடமைந்த புதிய கோவில் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இனிதே நிறைவேறியது. தற்போது கட்டிட நிர்மாணப் பணிகள் நடைபெறுகின்றன.

(புதிய கோவிலின் மாதிரித் தோற்றத்தையும், புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டல், வாஸ்து பூஜை மற்றும் தற்போது நிர்மாணப்பணிகள் நடைபெறுவதையும் படங்களில் பார்க்கலாம்)

இல. 188, புதுச்செட்டித்தெரு ஆலயத்தில் புனருத்தாரணப்பணிகள் நடைபெறுவதால். தற்காலிகமாக ஆலயத்தின் பின்பகுதியில் (இல.166, ஜம்பட்டா வீதி) வழமைபோல் பூஜைகள் மற்றும் பஜனைகள் நடைபெறுகின்றன. மேலதிக விபரங்களுக்கு இல.171, புதுச்செட்டித் தெருவில் அமைந்துள்ள புதிய அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.








"கிருஷ்ண பரமாத்மாவுக்கு அமைக்கப்படும் ஆலயத்திருப்பணியை ஆரம்பிக்கும் பக்தரின் ஏழு பிறவிக்குரிய பாவங்களும் நீக்கப்படுவதுடன் மூதாதையரும் நரக உலகிலிருந்தும் மீட்சி பெறுவர்" என ஸ்கந்தபுராணம் கூறுகின்றது. ஆகவே ஆலய நிர்மாணப் பணிகள் ஆரம்பக்கட்டத்தில் இருக்கும் இந் நிலையில் நன்கொடைகள் வழங்கி உதவுபவர்களுக்கு ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணாவிற்கு விஷேட அர்ச்சனை செய்த பிரசாதம் அனுப்பப்படும்.

ஆலயம் அமைப்பதற்காக நிதி உதவிகள் செய்ய விரும்புவோர் பணமாகவோ காசோலையாகவோ ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்திற் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவும். வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்த விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

Commercial Bank, Colombo 13. A/C Name - ISKCON Temple Fund A/C No-1120017042

Hatton National Bank, Colombo 13. A/C Name -ISKCON, Temple Fund A/C No- 207010000891



சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம் ஸ்தாபக ஆச்சாரியார் அருள்திரு அ.ச.பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா அவர்கள்

**சர்வதேச கிருஷ்ண பக்திக்கழகம்**

**(International Society for Krishna Consciousness) (ISKCON)**

இல.188, புதுச் செட்டித் தெரு, கொழும்பு 13.

தொலைபேசி: **2433325** மின்னஞ்சல் **iskcon@slt.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரே கிருஷ்ணா

GOKULAM

ISKCON

## பக்திவேதாந்த சிறுவர் இல்லம் - கோகுலம்
## 607A, நீர்கொழும்பு வீதி, மாபொல, வத்தளை

கோகுலம் சிறுவர் இல்லமானது 115 பிள்ளைகளுடன் ஆதரவற்ற குழந்தைகளை அரவணைக்கும் கருணை இல்லமாக இயங்கி வருகின்றது. இங்கு உணவு, உடை, உறைவிடம்,வைத்திய வசதிகள் உட்பட சகல வசதிகளும் செய்துகொடுக்கப்படுகின்றது. அவர்களுக்கு கல்வி பயில அதனுடன் இணைந்த பாடசாலையும் உள்ளது. அவர்களுக்கு தாங்களும் தங்களால் இயன்ற அளவு உதவி செய்து பகவான் அருள் பெறவேண்டுகின்றோம்.





**தற்போதைய சூழ்நிலையில் அவர்களை பராமரிக்க ஒரு நாளைக்கு ரூ.25,000/= செலவாகின்றது**

**தங்களின் நன்கொடைகளை பிறந்ததினம், திருமண வருட பூர்த்தி மற்றும் உறவினர்களின் ஞாபகார்த்தமாகவோ வழங்கி உதவலாம்**



## இஸ்கோன் கோசலா- பசுக்களை பராமரிக்கும் திட்டம்
## 44/88, கிருஸ்த்துராஜ மாவத்தை, ஏகித்த, வத்தளை

1999 ஆண்டு முதன் முதலாக ஒரு பசு ஆலயத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. இன்று 28 பசுக்கள் (கன்றுகளுடன்) கொண்ட ஒரு பண்ணையாக மாறிவிட்டது. ஸ்ரீல பிரபுபாதா அவர்கள் மக்கள் பசுவதைசெய்வதையும் பாலை பசுவிடமிருந்து பெற்ற பின் தாயாக மதிக்கப்பட வேண்டிய பசுவைக் கொன்று உணவாக உண்பதைப் பார்த்து பசுக்களைக் காக்க வேண்டுமென்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அவரது திட்டத்திற்கு ஏற்ப உருவாக்கப்பட்டதே எமது இஸ்கோன்கோசாலையாகும்.



நீங்களும எமது சேவையில் பங்குகொண்டு பசுக்களின் தலைவன் கண்ண கோபாலன் அருளைப் பெற்று உய்ய வேண்டுகின்றோம்.




இச்சேவைகளில் பங்குகொள்ள விரும்புகின்றவர்கள் தொடர்புகளுக்கு-

# சர்வதேச கிருஷ்ண பக்திக்கழகம்
## ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயம்

இல.188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13.

தொ.பேசி- 0112433325

**Email-iskcon@slt.lk / Web- www.iskcon.lk**
**www.gokulam.lk**



ஸ்தாபகர் ஆச்சாரியார்
அ.ச.. பக்திவேதாந்த
சுவாமி பிரபுபாதா அவர்கள்

**COMMERCIAL BANK, KOTAHENA BRANCH**
**A/C NAME: ISKCON A/C NO:1050669901**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Published by Flex Publications, 4 IBC Road, Wellawatte. Tel: 0777 614 186

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org